Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
**S. V. முருகேசன் அன் சன்ஸ்**
சென்னை பெங்களூர்–2 மதுரை

# ஈழநாடு

EELA NADU

போன் 389 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண் 49

மலர் 3 | யாழ்ப்பாணம் | பிலவ ஐப்பசி 21 ஆம் நாள் | ஜ. அவ்வல் 26 | (6-11-61) | திங்கட்கிழமை | இதழ் 227

# எஸ்.ஜே.வி. 11-ந் தேதி

## யாழ்ப்பாணம் வருகிறார்

### மகத்தான வரவேற்பு அளிக்க ஏற்பாடு

### பூரண குணத்துடன் காணப்படுகிறார்

கொழும்பு, ஞாயிறு

**வருகிற 11ந் திகதி சனிக்கிழமை காலை, தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஏர் சிலோன் விமான மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்வார். அவருக்கு மகத்தான வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.**

நேற்று திரு. எஸ். ஜே. வி. யுடன் திரு. வி. ஏ. கந்தையா எம். பி., திரு. வி. அழகக்கோன் எம்.பி. வழக்கறிஞர் திரு. எஸ். நடராஜா ஆகியோர் ஆலோசனை நடத்தினர்கள். லண்டனிலிருந்து சுகம் பெற்றுத் திரும்பிய திரு. செல்வநாயகத்தை நேற்று முழுதும் வர்த்தகர்களும், பிரமுகர்களும், வழக்கறிஞர்களும், அனுதாபிகளும் அவரது கொழும்பு இல்லத்துக்குச் சென்று சுகம் விசாரித்தார்கள். சில தினங்கள் அவரைக் கொழும்பிலேயே ஓய்வெடுத்துக் கொள்ளும்படி வழக்கறிஞர் திரு. நடராஜா கேட்டுக் கொண்டார்.

திரு. எஸ். ஜே. வி. இப்போது முன்னையை விட அதிக சுறுசுறுப்புடன் காணப்படுகிறார் என்றும், மெதுவாகப் பேசுவதுகூட அவருக்கு நன்கு கேட்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது. உரத்த குரலில் அவருடன் பேசியவர்களிடம், "நீங்கள் இப்போது மெதுவாகக் கதைத்தால்போதும்" எனச் சிரித்துக்கொண்டே ஸ்ரீமதி செல்வநாயகம் கூறினர்.

#### கொழும்பு விமான நிலையத்தில்

தடை செய்யப்பட்டுள்ள தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் பலரும் தலைவர் எஸ். ஜே. வி. யை கொழும்பு விமான நிலையத்தில் வரவேற்றனர். வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரமும் விமான நிலையத்துக்குச் சென்று அவரை வரவேற்றார்.

'தமிழ்த் தந்தையே வருக' என்று அங்கு திரண்டு நின்ற மக்கள் கோஷமிட்டு தலைவரை வரவேற்றனர். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் மற்றும் பலரும் தமிழ்ப்பாடல்கள் பாடினர்.

பல்வேறு மக்களும் பல்வேறு சங்கங்களின் சார்பிலும் எஸ். ஜே. வி.க்கு மாலைகள் சூட்டப்பெற்றன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களான ஜனாப் ஏ. அஸீஸ், திரு. எஸ். சோமசுந்தரம், திரு. கே. ராஜலிங்கம் ஆகியோரும் திரு. எஸ். ஜே. வி. யை விமான நிலையத்தில் வரவேற்று சுகம் விசாரித்தனர். யாழ்ப்பாணம், மட்

(5-ம் பக்கம் பார்க்க)

## "கணவர், புதல்வர் பற்றி பரிசீலனை நடத்துக"

### கம்யூனிஸ்ட் மத்திய கமிட்டிக்கு ஸ்ரீமதி டிராட்ஸ்கி கடிதம்

மாஸ்கோ, நவ. 5

தமது கணவர்மீதும், புதல்வர்மீதும் நடைபெற்ற விசாரணையை மீண்டும் மறு பரிசீலனை செய்யவேண்டுமென ஸ்ரீமதி டிராட்ஸ்கி சோவியத் அரசாங்கத்துக்கும், கம்யூனிஸ்ட் மத்தியக் கமிட்டிக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். ஸ்டாலினின் கோபத்துக்காளான டிராட்ஸ்கி 1940-ம் ஆண்டு மெக்ஸிகோவில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார். 1935-ம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட தமது புதல்வரின் கதி என்னவாயிற்று என அறிய விரும்புவதாயும், அவர் கைதுசெய்யப்பட்டதற்கு டிராட்ஸ்கியின் புதல்வன் என்ற ஒரு காரணத்தைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை என்றும் அவர் தம் கடிதத்தில் கூறியிருக்கிறார். ரஷ்யப் புரட்சியை வெற்றிகரமாக அமுலுக்குக் கொண்டு வருவதில் லெனினுடன் டிராட்ஸ்கியும், ஸ்டாலினும் முக்கிய பங்கு வகித்தவர்கள்.

## மாநகரசபை கூட்டம் 10ந்திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் இம் மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் மாநகரசபையில் புதிதாக பறக்கவிடப்பட்டிருக்கும் இருவர்ண யாழ்க் கொடியை அங்கீகரிப்பதுபற்றியும் இக் கூட்டம் ஆராயுமெனத் தெரிகிறது.

ஊழியர்களை வேலையினின்றும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தமை பற்றியும் தலத்தாபனக் கமிஷன் முரண்பாடுகள் சம்பந்தமாகவும் திரு. எம். யேக்கப் கேள்விகள் கேட்பாரெனத் தெரிகிறது.

## வருமான வரி இலாகா

### நிதிமந்திரி விசாரணை செய்வார்

கொழும்பு, ஞாயிறு

நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றிற் குறிப்பிட்டிருப்பதாவது:-

அபிசாவலை எம். பி. ஆகஸ்ட் 29-ம் திகதியன்று பார்லிமெண்டில் உள்நாட்டு வருமானவரி இலாகா மீது சமத்திய குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு அதிகாரபூர்வமான ஒரு கமிட்டி நியமிக்கப்படும் என நான் கூறியிருந்தேன். வருமானவரிச் சட்டத்தின் 4-வது விதி உத்தியோகபூர்வமான கமிட்டி விசாரணை செய்வதற்கு தடைவிதித்துள்ளது. எனவே, நானே விசாரணையை நடாத்துவது எனத் தீர்மானித்துள்ளேன். வருமான வரிகளை ஊழல்கள் எதுவுமின்றி சேகரிக்கக்கூடிய முறை எதுவுமுண்டா என்று ஆராய்வதற்காகவே நான் இதில் தலையிடுகின்றேன். எனது விசாரணைக்கு உள்நாட்டு வருமானவரி இலாகா எதுவித தகவலும் தரமாட்டாது. அதையிட்டு நான் திருப்தியடைகிறேன். விசாரணையின் நோக்கத்தை நிறைவேற்ற உள்நாட்டு வருமான வரி இலாகா அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றேன். அவர்களைக் குற்றவாளிகளாக்குவது இவ் விசாரணையின் நோக்கமாகாது என்பதை அவர்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். இலாகாவின் நிர்வாகம்பற்றிச் சாட்சியம் கூறுவதற்கு எந்தத் தொழிற் சங்கத்துக்கும், தனி மனிதனுக்கும் உரிமையுண்டு. எனக்குத் தரப்படும் சாட்சியங்கள் யாவும் இரகசியமாகவே வைத்திருக்கப்படும். பொறுப்புணர்ச்சியுடன் மக்கள் சாட்சியமளிப்பார்கள் என எதிர்பார்க்கிறேன். 'கால்பேஸ்' அரசாங்கக் கட்டடத்திலுள்ள எனது காரியாலயத்தில் நவம்பர் 6-ம் திகதியன்று விசாரணை ஆரம்பமாகும்."

## காயமடைந்த 23 யாத்திரிகர்கள் இன்று கொழும்பு வருகிறார்கள்

கொழும்பு, ஞாயிறு

இந்திய ரயில் விபத்தில் காயமடைந்த 23 இலங்கை யாத்ரீகர்கள் நாளை விசேஷ இந்திய விமானப்படை விமானமொன்றில் கொழும்பு வருவார்கள். நாளை பகல் வரவிருக்கும் இந்த விமானத்தில் இந்திய வைத்தியக் கோஸ்டி ஒன்றும், இரண்டு தாதிமார்களும், இந்திய ரயில்வேயின் சிரேஷ்ட உத்தியோகஸ்தர்களும் வருவார்கள்.

இந்த ரயில் விபத்தில் படு காயமுற்ற மற்றோர் இலங்கைப் பிக்கு இன்று மரணமானர். இத்துடன் மொத்தம் 17 இலங்கை யாத்திரிகர்கள் விபத்தினல் மாண்டுள்ளனர்.

### விடுமுறை

தீபாவளி விடுமுறையை முன்னிட்டு 8-11-61ல் "ஈழநாடு" வெளிவராது என்பதை நேயர்களுக்கு அறிவிக்கிறோம்.

## பஸ் நிறுத்துமிடம் மாற்றப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

இ. போ. ச. பஸ்களை யாழ்ப்பாணம் யாழ்ட்டா ஹோட்டலுக்கு முன் நிறுத்தாது மச்சடோ கம்பனிக்கு முன் நிறுத்துமாறு இ. போ. ச. அதிகாரிகளை யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜா கேட்டிருந்ததன்பேரில் இப்பொழுது பஸ் நிறுத்துமிடம் மாற்றப்பட்டுள்ளது.

யாழ்ட்டா ஹோட்டலுக்கு முன் பஸ்ஸை நிறுத்துவதால் பெண்களும் சிறுமிகளும் தொந்தரவுக்குள்ளாக வேண்டியுள்ளதாக யாழ்ப்பாண மேயருக்குப் பலர் தெரிவித்திருந்ததன் பேரிலேயே மேயர் இவ்வித நடவடிக்கை எடுத்திருந்தார்.

## காலனிகளுக்கு சுதந்திரம் வழங்குக

நியூயோர்க், நவ. 5

காலனிநாடுகளுக்கு அடுத்த ஆண்டிக்குள் சுதந்திரம் வழங்கவேண்டுமென்ற ரஷ்யாவின் ஒரு தீர்மானத்தை நாளை ஐ. நா. பொதுச்சபை விவாதிக்கவிருக்கிறது.

## 44-வது ரஷ்ய வருடாந்ததினம்

கொழும்பு, ஞாயிறு

44-வது சோவியத் வருடாந்த தினத்தை முன்னிட்டு நாளை கொழும்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். திரு. மார்ட்டின் விக்கிரமசிங்க தலைமை வகிப்பார். திரைப்படக் காட்சி ஒன்றும் நடைபெறும்.

## நேருஜி யு. எஸ். புறப்பட்டார்

லண்டன், நவ. 5

பிரதம மந்திரி ஸ்ரீ நேரு இன்று லண்டனிலிருந்து நியூயோர்க்குக்கு, விமானமூலம் புறப்பட்டார்.

## "இரு சமூகத்தினரும் பரஸ்பரம் புரிந்துகொள்ளுதல் அவசியம்"

### கலைப்பெரு மன்ற கூட்டத்தில் டாக்டர் தம்பையா பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"1958-ம் ஆண்டு வகுப்புக் [redacted] ளாததே இந் நிலைக்குக் காரணம் எனக் கூறினர். இந்தக் குறைபாட்டைப் போக்குவதில் யாழ்ப்பாணம் கலாச்சார சங்கம் உதவிசெய்ய முடியும்" என டாக்டர் குரேஸ்ட் தம்பையா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி "கலைப் பெருமன்றம்" அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும்போது றினர்.

"தென்னிலங்கையிலுள்ள [redacted] ச்சார சங்கத்தினருடன் [redacted] ச் சங்கமும் தொடர்பு [redacted] ண்டு இவ்வித நன்மைக [redacted] செய்ய முடியும். அங் [redacted] கலைஞர்களை இங்கு [redacted] ப்பதன் மூலமும் இங்கிரு [redacted] தென்னிலங்கைக்கு அழைக் [redacted] டுவதின் மூலமும் அது சாத் [redacted] கும்" என்றும் அவர் கூறினர்.

திரு. கே. பாலசுப்ரமணியம், டாக்டர் சிவஞானசுந்தரம் ஆகியோரும் பேசினர்கள். முதலியார் சின்னத்தம்பி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். வித்வான் எஸ். ஆறுமுகம் நன்றியுரை கூறினர்.

**ஈழநாடு**

**தீபாவளி அனுபந்தம்**

ஈழநாடு 7-11-61 இதழுடன் தீபாவளி அனுபந்தம் பிரபலஎழுத்தாளர்களின் கட்டுரைகள் கவிதைகளுடன் வெளியாகின்றது.

பக்கங்கள் 12 — பிரதி சதம் 10

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தந்தி: றைக்கிளீன் போன் 474

### றைக்கிளீன் செய்யும் பட்டு உடைகளை எங்களிடம் ஒப்படையுங்கள்

உங்கள் வழமை, எங்கள் வாடிக்கைக் காரர்களுடைய தொடர்பை எங்கள் மனதில் வேர் ஊன்றச் செய்ததே! தாங்கள் றைக்கிளீன் செய்ய, சாயம் போட தரும் உடைகளை மிகவும் கவனமாகத் தண்ணீரில் போடாது சலவையும் (Dry Clean) செய்து சாயமும் போட்டு, தவணை தவறுமல் தருவோம். பார்சல் மூலமே ஏற்று பார்சல் மூலமே அனுப்பிவைப்போம் எங்களிடம் இருக்கும் சூப்பர் மெஷின் உதவியைக்கொண்டு ஒருமணி நேரத்திலும் றைக்கிளீன் செய்துகொடுப்போம் என்பதை மறந்துவிடாதீர்கள்!

**சன்லைட் டையேஸ் அன் றைக்கிளீனஸ்**
(பஸ்நிலையத்துக்கு முன்பாக) பெரியகடை, — யாழ்ப்பாணம்.

### புற்று நோய்

புற்று நோய்க்கு கைகண்ட அவுடதமாக விளங்குவது **'யோகீஸ்வர ரசம்'**

இதனை உபயோகித்து குணமடைந்தோர் வெகு பலர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கைகண்ட அனுபவ சாதனை மூலம் இதன் மகிமை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு முறை எம்மிடம் மருந்து உண்டவர்களுக்கு திரும்பவும் இந்நோய் வரவில்லை என்பதற்கு நற்சாட்சிகள் தக்க கனவான்களிடமிருந்து எமக்கு கிடைத்துள்ளன. சமீபத்தில் குணமடைந்த ஒருவரது சான்றிதழ்:

"நான் புற்று நோயால் பீடிக்கப்பட்டு பல இடமும் சென்று பல மருந்துகள் சாப்பிட்டும் மாற்ற முடியாமல் இருந்தேன். இந்த "யோகீஸ்வர ரசம்" புற்று நோயை போக்கடிப்பதில் அதிதீவிரமுள்ளது. என்பதை அறிந்து பொ. செல்லையா சுதேச வைத்தியரிடம் சென்று மருந்து சாப்பிட்டு இரண்டு வாரங்களின்பின் எனது புற்று நோயை மாற்றி சுகதேகியானேன். இப்படிக்கு, ம.செல்லத்தம்பி, கூளாவடி, ஆனைக்கோட்டை.

இந்நோயால் பீடிக்கப்பட்டு வருந்துவோர் ஒருமுறை எம்முடன் கலந்தாலோசிக்கவும்.

**பொ. செல்லையா** ஆயுள்வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### மணிலா சுருட்டு

ரூபா 5-00 மணியோடர் அல்லது போஸ்டல் ஓடருடன் வரும் ஓடர்களுக்கு 10 பாக்கெற்றுகள் கொண்ட 100 சுருட்டுகள் தபால்செலவின்றி அனுப்பப்படும்.

முன் ஏஜண்டுகளுக்கு விண்ணப்பம் செய்யாத ஊர்களிலிருந்துவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணத்தில் வியாபாரிகளுக்கு விற்பனைசெய்ய சைக்கிள் உள்ளவர்கள் நேரில் வரவும். தகுந்த கமிஷன் தரப்படும்.

மனேஜர், யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை, ஐக்கியவியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்.


# "அரசியல் உரிமை ஆசிரியர்களுக்கு கூடாது"

## கல்வி மந்திரி கருத்து

புத்தளம், வெள்ளி

"ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவது இயலாத செயலாகும் நான் பள்ளிக்கூட அதிபராக இருந்தபோது அரசியல் உரிமைகளை அனுபவித்தது உண்மை; ஆனல் இன்று பள்ளிக்கூடங்கள் அனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டால் ஏனைய அரசாங்க ஊழியர்கள் தமக்கும் இந்த உரிமைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்வர்."

இவ்வாறு கல்வி மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் புத்தளம் சிலாபப் பகுதி ஆசிரியர்கள் சங்க மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினர். ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் பண்டிதர் பசுபதி கல்வி மந்திரிக்கு ஒரு மகஜரை சமர்ப்பித்திருந்தார். அம் மகஜருக்குப் பதிலளிக்கும் முகமாக ஜனப் பதியுதீன் மாமூத் கூறியதாவது:

"நான் சென்று வரும் இடமெல்லாம் ஆசிரியர் சங்கங்களும் அப்பேர்ப்பட்ட வேறு சங்கங்களும் அரசியல் உரிமையும், சம்பள உயர்வும், இடமாற்றமும் கேட்டு வருகிருர்கள். ஆனல் இம்மகாநாட்டில் ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களினதும் மாணவர்களினதும் நலனுக்குத் தேவையானவற்றையே கோரியுள்ளார்கள். இது மகிழ்ச்சியளிக்கிறது.

ஆசிரியர்களுக்கு வேண்டிய வசதிகளை இப்போது நிதியில்லாத காரணத்தால் வழங்க முடியாதிருக்கிறது. நிதி கிடைத்ததும் அவர்களுக்குத் தேவையான யாவும் வழங்கப்படும்.

நான் பள்ளிக்கூட அதிபராகக் கடமையாற்றும்போது எனக்கு அரசியல் உரிமைகள் இருந்தபடியால்தான் இன்று கல்வி மந்திரி பதவியிலிருக்கின்றேன். ஆனல் இன்று பள்ளிக்கூடங்கள் அரசாங்கத்தின் பொறுப்பிலிருக்கின்றன. ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கினல் ஏனைய அரசாங்க ஊழியர்களும் அரசியல் உரிமைக்குப் போராடுவார்கள்.

இன்றைய தேசிய கல்வி முறையின் வெற்றி ஆசிரியர்களில்தான் தங்கியுள்ளது. எனவே ஆசிரியர்கள் தம்மால் இயன்ற அளவு முயற்சிக்க வேண்டும்.

## ஒரு ஆட்டத்தால் தோல்வி

மாவிட்டபுரம், வெள்ளி

தையிட்டி லைரார் விளையாட்டுக் கழகத்திற்கும் காங்கேசன்துறை றேயல் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே றேயல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் றேயல் விளையாட்டுக் கழகம் ஒரு ஆட்டத்தால் தோல்வியுற்றது.

போட்டிக்கு திரு. கே. செல்லத்துரை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

[redacted]


### விற்பனைக்கு

"அல்கன்" தண்ணீர் இறைக்கும் பம்பு ஒன்று, நல்ல நிலைமையில் விற்பனைக்குள்ளது. விபரங்களுக்கு:

வ. வைத்திலிங்கம்
"லிங்க வாசா"
நவாலி வடக்கு, மானிப்பாய்.


## ரூ. 75 அபராதம் செலுத்தினர்

தெலிப்பழை, வெள்ளி

சங்கானையைச் சேர்ந்த மார்க்கண்டு கனகரத்தினம் என்பவர் ஒருருத்தல் துவரம் பருப்பின் கட்டுப்பாட்டுவிலை 34 சதமாக விருக்கையில் 40 சமாக விற்றதாக உணவுவிலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. ஏ மார்க்கண்டுவால் குற்றம் சாட்டப்பட்டு மல்லாகம் நீதிபதி திரு. டபிள்யூ. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரியை ரூ 75 அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

## சுகாதார நிலை உயர்வுக்கு ஒத்துழைப்பு தேவை

### உதவிடைரக்டர் பேச்சு

மாவிட்டபுரம், வெள்ளி

"கிராமத்தின் சுகாதார நிலையை உயர்த்த வேண்டுமென நினைத்து உண்மையில் உழைக்கும் ஊழியர்கள் மத்தியில் நான் இப்பொழுது இருக்கின்றேன். உங்கள் ஒத்துழைப்பின்றி கிராமத்தின் சுகாதார நிலையை உயர்த்திவிட முடியாது."

இவ்வாறு தெலிலிப்பளை பெற்றூர் ஆசிரிய சங்கக் கூட்டத்தில் பேசியபோது சுகாதார உதவி டைரடர் டாக்டர் பி. இராஜசிங்கம் குறிப்பிட்டார்.

# "எனது கணவர் பிரக்ஞையற்றுக் கிடந்தார்"

## கொலை முயற்சி வழக்கில் மனைவி சாட்சியம்

தெல்லிப்பழை, வெள்ளி

உடுவிலில் வைத்து புத்தூர் மேற்கைச் சேர்ந்த பெரியான் சிதம்பரப்பிள்ளை என்பவரைக் கடந்த ஆகஸ்ட் மாதம் 17-ம் திகதி கத்தியால் வெட்டிக் கொலைசெய்ய எத்தனித்ததாக உடுவில் வாசியான வயிரவன் பாலன் எனபவர் மீது சுன்னுகம் பொலிசாரால் குற்றஞ் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளியின் மனைவியான பசுபதி (20 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எனது கணவரான சிதம்பரப்பிள்ளை உடுவில் வாசியான எதிரியிடம் தனக்கு வருமதியான பணத்தைப் பெறுவதற்காகச் சம்பவம் நிகழ்ந்த காலை ஆறுமணியளவில் வீட்டை விட்டுக் கிளம்பிச் சென்றூர். அன்றிரவு எனது கணவர் வீட்டுக்கு திரும்பிவரவில்லை. மறுநாட் காலை எனது கணவரைக் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிற் கண்டேன். அப்போது நேரம் ஆறுமணியிருக்கும் அவர் பிரக்ஞையற்றுக் கிடந்தார். இரண்டரை மணித்தியாலங்கள் கழிந்த பின்னர் எனது கணவர் அறிவு தெளிந்தார். அப்போது என்னுடன் பேசினர். தன்னைப் பாலன் வெட்டினர் என்று என்னிடம் கூறினர்.

உடுவிலைச் சேர்ந்த சின்னவி வைத்தியலிங்கம் என்பவரும் சாட்சியமளித்தார்.

இந்நிலையில் மேல்விசாரணை இம் மாதம் 16-ம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

## காயம் விளைவித்ததாக வழக்கு

மாவிட்டபுரம், வியாழன்.

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த முருகேசு சிவக்கொழுந்து என்பவரை வாழால் வெட்டி காயம் உண்டுபண்ணியதாக குரும்பசிட்டியைச் சேர்ந்த வெள்ளையன் கந்தையா, வசாவிளானைச் சேர்ந்த முருகேசு சிவக்கொழுந்து ஆகிய இருவர்மீதும் குற்றம்சாட்டி காங்கேசன்துறை பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிபதி வெஸ்லி. டி. தாமோதரம் இரு எதிரிகளையும் தலா 500 ரூபாய் பிணையில் செல்லும் படியும் இம்மாதம் 10ம் திகதி கோட்டில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டார்.

காங்கேசன்துறைக் குற்றப் பிரிவு இன்ஸ்பெக்டர் கே. துரைசிங்கம் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

## ரூ. 160 அபராதம்

திருக்கோணமலை, சனி

கந்தளாய் பண்டாரநாயகா மாவத்தையில் வசிக்கும் இராமையா இராமசாமி என்பவர் 8 டிராம் வடிசாராயம் வைத்திருந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் திருமலை மாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துல் காதர் எதிரிக்கு ரூபா 160 அபராதம் விதித்தார்.

# கத்தியால்வெட்டி காயம் விளைவித்தாராம்

## எதிரிக்கு 6 மாதச் சிறை

மாவிட்டபுரம், வியாழன்.

ஏழாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் கனகரத்தினம் என்பவரை கத்தியால் வெட்டி காயம் விளைவித்ததாக அதே ஊரைச் சேர்ந்த வல்லிபுரம் சுப்பிரமணியம் என்பவர்மேல் சுன்னுகம் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு 6 மாத கடுழியச் சிறை விதித்துத் தீர்ப்புக் கூறுகையில்:- "நீ கத்தி வைத்திருந்ததைக் கண்டதும் வழக்காளி உனக்கு பயந்து ஓடியிருக்கிறூர். ஓடும் வழியில் அவர் கீழே வீழுந்திருக்கிறூர். அவ்வேளையில நீ கத்தியால் வெட்டியிருக்கிறுய் உனக்கு பயந்து வழக்காளி ஓடியபோதும் உனது விஷமத்தனம் குறையவில்லை. அவரைக் கத்தியால் வெட்டிய பிறகுதான் திருப்தி அடைந்துள்ளாய். இவ் வழக்கில் கூறிய சாட்சியங்கள் உனது குற்றத்தை நிருபித்துள்ளது." என்று குறிப்பிட்டார்.

"நீ பொலிசாரின் கண்ணுக்கு அகப்படாமல் 10 நாட்கள் தலைமறைவாக இருந்திருக்கிறுய். நீ இப்படி செய்ததற்குக் காரணம் பொலிசாருக்குப்பயர்து தான்என்று கூறியிருக்கிறுய். நேர்மையானவன் எவனும் பொலிசாருக்குபயப்பட மாட்டான். நீ இப்படி செய்ததற்குக் காரணம் நீர்செய்தபிழை என்றபடியால்தான். நீ பொலிசாரிடம் சென்று நடந்தவற்றைக் கூறவில்லை. நீ செய்திருக்கின்ற குற்றம் ஓர் மாபெரும் குற்றமாகும் யாழ்-மாவட்ட நீதிபதியின் அனுமதியுடன் இவ்வழக்கை விளங்குவதால் நான் உனக்கு இலகுவான தண்டனை தரமுடியாது. ஆதலால் உன்னை 6 மாதத் தண்டனைக்கும் அப்பீல் எடுப்பதாய் இருந்தால் 2500 பிணையில் செல்லும்படியும் உத்தரவிடுகிறேன்" என்று நீதிபதி கூறுனர்.


### நவக்கிரக மகாயாக கோடியக்ஞ விஞ்ஞாபனம்

உளுகங்கை மாநகர்

1962-ம் வருடம் பெப்ரவரி மாதம் 3-ந் திகதி அஷ்டகிரகங்களும் அதாவது இராகு தவிர்ந்த மற்றைய எட்டு கிரகங்களும் மகர இராசியில் ஒன்று கூடுவதை குறித்து 18-8-61 தொடக்கம் மகாயாகம் நடைபெற்றுவருகிறது. இவ்யாகம் 11-2-62-ல் முடிவடையும். ஆகவே ஆஸ்தீக அன்பர்கள் அனைவரும் தங்களாலியன்ற பொருளுதவி செய்து யாகத்தில் பங்குபற்றி நவக்கிரக தேவதைகளின் கிருபாகடாக்ஷம் பெற்று இஷ்டசித்தியுடன் இனிது வாழ்வீர்களாக!. சுபமஸ்து!

இங்ஙனம்
பிரம்மஸ்ரீ T.V.S.V. சர்மாசுவாமி
ஜடாவல்லகனபாடிகள்

போன்: 806 மடுக்கலை
உளுகங்கை மடுக்கலை போஸ்ட்

### தீபாவளிக்கு

★ உள்நாட்டு உடைகள் ★

கைத்தறிச் சேலை ★ பரமாஸ் வேட்டி சால்வை
திறம் துவாய் ★ நனைமுண்டு
யாழ்ப்பாணத்து ★ 'செல்க்காஸ்' சேட்
'லைடன்' பனியன் ★ 'சந்திரா' பனியன்
படுக்கை விரிப்பு ★ கதிரைச் சீலை

முதலாக மற்றும் உணவு வகைகள், பழரசங்கள் சீமெண்ட், பண்டங்கள், பூச்சட்டிகள், நீர்வேலிக் கத்திகள், சீலை, சிப்பி, களிமண் ஆகியவற்றுல் செய்த பாவைகள், வண்ணப்பாய்கள் ஆகியவற்றிற்கு

**ஈழப் பொருளாதார அபிவிருத்திச் சங்கம்**
113, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

# அணு ஆயுத சோதனை தடை மிக அவசியம்

## லண்டனில் நேரு பேட்டி

### ஜேர்மன், காங்கோ பற்றியும் தெரிவித்த கருத்துக்கள்

லண்டன், நவ. 5

அமெரிக்கா செல்லும் வழியில் நேற்று லண்டன் வந்து சேர்ந்த பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மிலனுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

பிரதமர் மாக்மிலனுடன் ஸ்ரீ நேரு நேற்று நண்பகல் விருந்துண்டார்.

லண்டன் வந்து சேர்ந்த ஸ்ரீ நேரு பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அணு ஆயுத பரிசோதனைத் தடை ஒப்பந்தம் மிக மிக அவசியமென்று கூறினர்.

"அணு ஆயுத பரிசோதனைகளைத் தடை செய்வது சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு முன்னுள்ள இடைக்காலத்தில் சகல நாடுகளும் அணு ஆயுத பரிசோதனைகளை நிறுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். இதனுல்தான் அணு ஆயுத பரிசோதனைத் தடை ஒப்பந்தத்துக்கு முன் அணு ஆயுத பரிசோதனைகளைச் சகல நாடுகளும் நிறுத்தி வைக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானத்தை ஐ. நா. அரசியல் கமிட்டிக் கூட்டத்தில் பாரதம் கொண்டு வந்தது" என்று ஸ்ரீ நேரு சொன்னர்.

**சோதனைகள் யாவும் கெடுதலே!**

"அணு ஆயுத சோதனைகள் அவை எப்படிப்பட்டவையாக இருந்தாலும், கெடுதியானவைதான். அணு ஆயுத பரிசோதனைகள் நடத்துவதற்கு எந்த நாட்டுக்கும் எந்த அரசுக்கும் நியாயமே இல்லை" என்று ஸ்ரீ நேரு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

சோவியத் யூனியன் மீண்டும் அணு ஆயுத சோதனைகளை ஆரம்பித்த செய்தி என்னைத் திகைக்க வைத்தது. இதுபோன்ற சோதனைகள் பிறரையும் அணு ஆயுத சோதனைகளை ஆரம்பிக்குமாறு தூண்டும். யுத்த மனப்பான்மையையும் இவை வளர்க்கும்.

"சோவியத் யூனியன் அணு ஆயுத பரீட்சைகளை ஆரம்பித்ததற்கு நீங்கள் ஏன் வன்மையாகக் கண்டிக்கவில்லை" என்று ஒரு நிருபர் கேட்டதற்கு ஸ்ரீ நேரு பதிலளிக்கையில் "எந்த நாட்டையும் தூஷணை செய்யும் பழக்கம் எனக்கு இல்லை" என்று கூறினர்.

பெல்கிரேட் மாகாநாட்டுக் குப்பின் நடுநிலைமை நாடுகளின் முக்கியத்துவம் குறைந்து விட்டது உண்மையில்லையா? என்ற மற்றொரு நிருபரின் கேள்விக்கு ஸ்ரீ நேரு பதிலளிக்கையில் "அது உண்மையல்ல" என்று கூறினர். 'நடுநிலைமை நாடுகளின் முக்கியத்துவம் குறைந்து விடவில்லை. எந்த நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தாலும் நடுநிலைமைக் கொள்கைதான் சரியானதென்பது எங்கள் உறுதியான நம்பிக்கை. ராணுவ மண்டலக் கொள்கை தோல்வியடைந்து விட்டது. ராணுவ மண்டலக் கொள்கையினுல் போர் அபாயமும் தேக்க நிலையும் தான் ஏற்படுமேயொழிய வளர்ச்சி ஏற்படாது" என்று ஸ்ரீ நேரு தெரிவித்தார்.

**ஜேர்மன் நிலைமை**

ஜேர்மன், பேர்லின் நிலைமை பற்றிக் குறிப்பிடுகையில் இரண்டு மாதங்களுக்கு முன்னிருந்த நெருக்கடி நிலைமை இப்பொழுது குறைந்துவிட்டதென்றார்.

காங்கோ பற்றி பிரதமர் நேரு குறிப்பிடுகையில் காங்கோ சம்பந்தமான பாதுகாப்புச் சபையின் தீர்மானம் அமுல் நடத்தப்பட வேண்டுமென்றும் காங்கோவிலிருந்து அந்நியர்கள் முற்ருக வெளியேற்றப்பட வேண்டுமென்றும் அப்பொழுதுதான் அங்கு அமைதி நிலவுமென்றும் தெரிவித்தார்.

ரொடிஷியா, பெல்ஜியம், தென்னுபிரிக்கா, அல்ஜீரியாவிலிருந்து ஓடி வந்த பிரஞ்சுக்காரர் ஆகியோரின் உதவியும் தூண்டுதலும்தான் காங்கோவில் குழப்ப நிலைமை தொடர்ந்திருப்பதற்குக் காரணமென ஸ்ரீ நேரு குறிப்பிட்டார்.

பிரிட்டனில் காமென்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவர்கள் குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் திட்டம் காமென்வெல்த்துக்கு கொள்கையளவில் தீங்கு விளைவிக்கும் என்றும் ஸ்ரீ நேரு கூறினர்.

---

## அடினேர் - கென்னடி சந்திப்பு

பொன், நவ. 5

மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் கொன்ராட் அடினேர் இம்மாதம் அமெரிக்காவுக்குச் சென்று பெர்லின், ஜெர்மன் பிரச்சினைகள் சம்பந்தமாக அதிபர் கென்னடியுடன் பேச்சு வார்த்தை நடத்துவார்.

---

## 'டைனமைட்' மீன்!

திருக்கோணமலை, சனி

டைனமைட் உபயோகித்துப் பிடிக்கப்பட்ட மீன்களைத் தன் பொறுப்பில் வைத்திருந்ததாக சாம்பல்தீவிலுள்ளசின்னராசா பொன்னம்பலம் என்பவர் மேல் தொடரப்பட்ட வழக்கில் திருமலை மாவட்ட நீதிபதி எதிரிக்கு ரூபா நூறு அபராதம் விதித்தார்.

## ஆசிரியர்கள் தரம் உயர்வில் பாரபட்சம்?

முள்ளியவளை, சனி

"பயிற்றப்பட்ட இரண்டாம் வகுப்புத் திராதரமுடைய பழைய ஆசிரியர்கள், 5 வருட சேவை முடிவில் முதலாம் வகுப்புக்கு உயர்த்தப்பட்டிருக்க புதிய ஆசிரியர்கள் 3 வருட சேவை முடிவில் உயர்த்தப்படுகிருர்கள். இதனுல் பழைய ஆசிரியர்கள் பாதிக்கப்படுவது பிரத்தியட்சமானது. ஆகவே, 5 வருட சேவை முடிவில் தரம் உயர்த்தப்பட்ட பழைய ஆசிரியர்கட்கு நீதிகிடைக்க வழி செய்யவேண்டும்."

வித்தியாபகுதியின் இணைப்புக் கவுன்சில் கூட்டத்தில், ஜாதிக சேவா ராஜ்ய குருசங்கத்தின் சார்பாகப் பேசிய திரு. டி. எம். பி. பி. தென்னக்கூன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய வித்தியாபகுதி அங்கத்தினர், "இது மந்திரிசபையினுல் தீர்மானிக்கப்பட்டுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்ற பின்பே வித்தியாபகுதியினுல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படலாம்" எனத் தெரிவித்தார்.

அரசாங்க தலைமையாசிரியர் சங்கத்தின் சார்பாகப் பேசிய திரு. ஏ. ஏ. கிரிபண்டா தலைமையாசிரியர்களாகச் சேவை செய்தவர்கள் உதவியாசிரியர்களாக நியமிக்கப்படும் நிலைமை பற்றியும், பதில் தலைமையாசிரியர்களாகக் கடமையாற்றுவோருக்குள்ள கஷ்டங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

---

## தென்கொரியாவில் டீன் ரஸ்க்

சியோல், நவ. 5

அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன் றஸ்க் இப்பொழுது தென் கொரிய குடியரசுக்கு விஜயம் செய்துள்ளார். தென் கொரியக் குடியரசு அமெரிக்காவின் நேசநாடு என்று அவர் கூறினர்.

# காங்கோ படைகள் பின் வாங்கின!

## கடாங்காவின் கடும் எதிர்த்தாக்குதல்

### பாதுகாப்புச் சபை கூடுகிறது

லியப்போல்ட்வில்வி, நவ. 5

காங்கோவுடன் கடாங்காவை இணைக்கும் நடவடிக்கையாக கடாங்காவுக்குள் 40 மைல் தூரம் முன்னேறிச் சென்ற காங்கோ மத்திய அரசாங்கத்தின் படை அணிகளை அந்நிய ராணுவ அதிகாரிகளின் தலைமையிலுள்ள கடாங்கா படைகள் விரட்டியடித்து விட்டதாக லியப்போல்ட் வில்லியில் தெரிவிக்கப்பட்டது.

காங்கோத துருப்புக்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜெனரல் மோபுத்து தலைமையில் இரண்டு படை அணிகளும் ஸ்டான்லி வில்லியைச் சேர்ந்த லின்டுலா தலைமையில் ஒரு படை அணியுமாக காங்கா மத்திய அரசாங்கத்தின் மூன்று படை அணிகளும் கடாங்காவுக்குள் முன்னேறிச் சென்றுகொண்டிருந்தன.

கடாங்கா படைகளின் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் இப்படை அணிகள் காங்கோ எல்லைக்குத் திரும்பி வந்து சேர்ந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

காங்கோ நிலைமை சம்பந்தமாக விவாதிப்பதற்கு ஐ. நா. பாதுகாப்புச்சபை இவ்வாரம் கூடுமென்று ஐ. நா. தலைமைக் காரியாலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காங்கோ நிலைமை பற்றி ஆராய்வதற்கு பாதுகாப்புச் சபையின் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று எதியோப்பியா, சூடான, நைஜீரியா ஆகிய மூன்று நாடுகளும் கோரியுள்ளன.

காங்கோவில் கடமையாற்றும் ஐ. நா. படைகளின் எண்ணிக்கை இப்பொழுது குறைந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. 19,000 துருப்புக்களைக் கொண்ட ஐ. நா. படை இப்பொழுது 14,000 துருப்புகளுடன்தான் உள்ளது.

# தோட்டக் குழந்தைகளின் கல்விக்கு உள்ள தடை!

## பிரதமரை பேட்டிகாண யூனியன் நடவடிக்கை

நாவலப்பிட்டி, சனி

"இந் நாட்டின் வருமானத்தில் பெரும் பகுதியைத் தேடித் தரும் தோட்டத்தொழிலாளர்களின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டு வருகிறது. அவர்களின் அன்ருட பிரச்சினைகள் மட்டுமல்ல, அவர்களின் பரம்பரையினரும் கஷ்டப் படும் மோசமான நிலை தற்போது உருவாகிக் கொண்டு வருகிறது. பிரஜா உரிமையற்ற மக்களாக கருதப்பட்டவர்களின் குழந்தைகளுக்கு இனி அரசினர் பாடசாலைகளில் அனுமதியில்லை என்ற அறிக்கையைக் கண்டு தொழிலாளர்கள் கண்கலங்குகின்றனர். நமக்குத்தான் விமோசனம் இல்லை என்ருல் நமது குழந்தைகளின் நிலைமையும் அதோகதியாகின்றதே. இதுவிஷயத்தில் நாம் இனி வெறுமனே மேடைப் பிரசங்கங்களிலும் அறிக்கையிலும் காலம் கடத்தாமல் தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இது விஷயமாக நமது தலைமை காரியாலயம் பிரதம மந்திரியைப் பேட்டி காண நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. இந் நாட்டில் வாழும் சகல குழந்தைகளும் பாகுபாடின்றி எக்கல்லூரியிலும் கல்வி பயிலுவதற்குரிய வசதியை அரசாங்கம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்" என்று நாவலப்பிட்டி மாவட்டத்தைச் சேர்ந்த பூசல்லா கலுகலைத் தோட்டத்தில் நடந்த தேர்தற் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசியலங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். இராமாநுஜம் குறிப்பிட்டார்.

---

## உதவிவித்தியாதிபதிக்கு பாராட்டு

முள்ளியவளை, சனி

"பழுத்த அறிவும் பரந்த அனுபவமும் மிக்க தாங்கள் உதவிவித்தியாதிபதி பதவிக்கு உயர்ந்தமையை குறித்துஎமது சங்கத்தின் மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிருேம்."

உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரத்துக்கு வவுனியாப்பகுதி நிரந்தரவாச அரசினர் ஆசிரிய சங்கத்தின் சார்பாக அதன் செயலாளர் திரு. க. சிவக்கொழுந்து அனுப்பி வைத்துள்ள பாராட்டுக் கடிதமொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

---

## சட்டவிரோதமாக சாராயம் வடித்தாராம்

### ரூ. 500 அபராதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சட்டவிரோதமாக 24 திரும் வடிசாராயம் உற்பத்திசெய்ததாக உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த காசியன் சிவலிங்கம், கந்தன் இரத்தினம் ஆகிய இருவர் மேலும் சுன்னுகப் பொலிசாரால் குற்றம்சாட்டி யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் காசியன் சிவலிங்கத்தைக் குற்றவாளியாகக்கண்ட நீதிபதி அவரை ரூபா 500 அபராதம் செலுத்தும்படி கட்டளையிட்டார்.

2-வது எதிரியான கந்தன் இரத்தினத்தை நீதிபதி விடுதலை செய்தார்.

சுன்னுகப்பொலிசைச்சேர்ந்த சார்ஜன்ட் வி. வீரவாகு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

## பஞ்சாபில் இயந்திர தொழிற்சாலை

புதுடில்லி, நவ. 5

பஞ்சாபில் பஞ்சோர் என்ற இடத்தில் இயந்திரத் தொழிற்சாலையொன்று அமைக்கப்படவிருக்கிறது. கைக்கடிகாரங்களும் மற்றும் பல பொருள்களும் இங்கு உற்பத்தி செய்யப்படவிருக்கின்றன. இத்தகவலை பஞ்சாப் முதன் மந்திரி திரு. பிரதாப்சிங் கய்ருன் தெரிவித்தார்.

---

## மீண்டும் ஒரு குண்டுப் பரீட்சை!

வாஷிங்டன், நவ. 5

சோவியத் யூனியன் நேற்று மேலும் ஒரு அணுகுண்டை பரீட்சை செய்ததாக அமெரிக்க அணுசக்திக் கமிஷன் அறிவித்துள்ளது.

பல 'மெகா' தொன் சக்தி வாய்ந்ததாகக்கருதப்படும் இந்தக்குண்டு ஆர்க்டிக் பிரதேசத்தில் நேற்றுக் காலை பரீட்சை செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்றைய பரீட்சையுடன் சோவியத் யூனியன் இப்பரீட்சைத் தொடரில் 31 குண்டுகள் பரீட்சை செய்துள்ளது.

---

## எகிப்தில் பொதுத் தேர்தல்

கெய்ரோ, நவ. 5

எகிப்தில் தேசிய காங்கிரசுக்கான பொதுத் தேர்தல் ஜனவரி மாதத்தில் நடைபெறுமென்று ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் கேணல் நாஸர் அறிவித்துள்ளார்.

---

## தென்னுபிரிக்காவில் 1200 பேர் கைது

ஜோகன்னர்ஸ்பர்க், நவ. 5

தென்னுபிரிக்காவில் டிரான்ஸ்வாலிலும் நேட்டாலிலும் சென்ற வெள்ளிக்கிழமை 1200 பேர் கைது செய்யப்பட்டனர். குற்றச்செயல்களில் ஈடுபட முயற்சி செய்தார்களென்றும் பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்தனரென்றும் தெரிவித்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

---

## விபசாரத் தடைச் சட்டம்

சென்னை, நவ. 5

விபசாரத் தடைச்சட்டத்தை தீவிரமாக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று சென்னையில் நடைபெற்ற சமூக நல்லொழுக்க மகாநாட்டில் நிறைவேறியது.

விபசாரத் தொழில் சட்டவிரோதமாக்கப்பட வேண்டுமென்றும் மகாநாடு கேட்டுக் கொண்டது.

---

## சைக்கிள் கிடைத்தது!

திருக்கோணமலை, சனி

மட்டக்களப்பைச் சேர்ந்த வி. தங்கவேல் என்பவருடைய சைக்கிள் பல மாதங்களுக்கு முன் களவுபோனது சம்பந்தமாக உப்புவெளி பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த சார்ஜன்ட் விஜயரத்தின சாம்பல் தீவிலிருக்கும் கே. இராசையா என்பவரைக் கைதுசெய்துள்ளார். சம்பந்தப்பட்ட சைக்கிள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

**மணி வாக்கு**

"பிறரை நேசிப்பதன் மூலமாக ஒருவன் இறைவனை நேசிக்கிறான்".


ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 21 உ (6-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## ஐ. நா. ஸ்தாபன பொதுக்காரியதரிசி

ஆசியாவைச் சேர்ந்த யூதாண்ட், ஐக்கிய நாடுகள் சபையின் பதில் பொதுக் காரியதரிசியாக போட்டியின்றி தெரிவு செய்யப்பெற்றுள்ளது மகிழ்ச்சியும் புதிய நம்பிக்கையும் அளிப்பதாகும்.

இதுவரை அப்பதவி வகித்த இருவரும் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள். மிகுந்த பொறுப்பும், அனுபவமும், திறமையும் தேவையான அந்தப் பதவிக்கு ஆசியாவைச் சேர்ந்த ஒருவரை தெரிவு செய்துள்ளது இன்றைய உலகில் ஆசியா வகிக்கும் முக்கிய ஸ்தானத்துக்கும், வளர்ந்து வரும் அதன் மதிப்புக்கும் ஓர் அடையாளமாகக்கொள்ளுவது தவறாகாது.

காங்கோவில் திரு. ஹமர்ஷீல்ட் கொல்லப்பட்டபின், ஐ. நா. ஸ்தாபனம் இனி உயிருடன் வாழுமா என்றும் ஐயமேற்பட்டது. வல்லரசுகள் போட்டியும், ஆதிக்க வெறியும் தாண்டவமாடும் உலகத்திலே, ஐ. நா. ஸ்தாபன பொதுக் காரியதரிசி பதவி எவ்வளவு சங்கடமும் ஆபத்தும் நிறைந்ததென்பதும் வெளியாயிற்று. இரு போட்டி வல்லரசுகளும், விட்டுக்கொடுத்து, யூதாண்டை ஏகமனதாக அப்பதவிக்குத் தெரிவு செய்துள்ளதால், அவருக்கு இவ்விரு வல்லரசுகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைப்பதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அப்பொறுப்பை அவர் நிறைவேற்றி, உலக சமாதானத்தைப் பலப்படுத்த முடிவதாக இருக்கும்.

புதிய பொதுக் காரியதரிசி தமக்கு அமெரிக்கா, ரஷ்யா இந்நாடுகளைச் சேர்ந்த இருவரை ஆலோசகர்களாக நியமித்துக் கொண்டிருக்கிறார். நடு நிலைமை வாதியான யூதாண்ட், இரு போட்டி வல்லரசுகளைச் சேர்ந்த இரு ஆலோசகர்களையும்பெற்றுகாரியங்கள் செய்ய முற்பட்டுள்ளதால், ஐ. நா. ஸ்தாபன நிர்வாகமும் இனி எந்தப்பக்கமும் சாயாமல், சீராகச் செல்லக் கூடியதாகவுமிருக்கும். இதனால் இரு போட்டி வல்லரசகளிடையேயுள்ள தப்பெண்ணங்களும், வேற்றுமைகளும் குறைந்து, பரஸ்பர ஒத்துழைப்பு ஏற்படக்வும்கூட வழிபிறக்கலாம்.

வர வர ஐ. நா. ஸ்தாபனத்தின் பொறுப்பும், முக்கியமும் அதிகரித்து வருகிறது. உலக சமாதானம் பாதுகாக்கப்படவேண்டுமானல் அதற்கு ஒரே ஒரு நம்பிக்கையாக இருப்பது இந்த ஸ்தாபனமே. அதன் நிர்வாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பெற்றுள்ள யூதாண்டின் கையிலேயே இது பெரிதும் தங்கியுள்ளது எதிர் வரும் சோதனைகளையும், சங்கடங்களையும் வற்றெிகரமாகச் சமாளித்து, ஐ. நா. ஸ்தாபனத்தையும் உலக சமாதானத்தையும் பலப்படுத்துவதில் நடு நிலைமையாளரும் ஆசியாக்காரருமான யூதாண்ட் வெற்றிபெறவேண்டுமென்பதே நமது நம்பிக்கையும் பிரார்த்தனையுமாகும்.

# உலக அமைதிக்கு வழி

—ஆச்சாரிய வினோபாஜி—

பிறநாடுகளில் அல்லது நாடுகளிடையே சத்தியாக்கிரகம் செய்வதானல் அதை எப்படிச் செய்வதென்று கேட்கிறார்கள். சத்தியாக்கிரகம் ஒரு பரமார்த்திக அல்லது ஆன்மீக சக்தி. அது பௌதிக சக்தியுமல்ல; மனோ சக்தியுமல்ல. விஞ்ஞானம் தோன்றி மனத்தத்துவத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டது. இதனால் இப்பொழுது மனதிற்கு மேலே எழுந்து, அதிமானச நிலையில் நின்று கொண்டே சத்தியாக்கிரக ஆராய்ச்சி நடத்த வேண்டும். நீங்கள் உலக விவகாரங்களை, நாடுகளிடையே தோன்றும் சச்சரவுகளை சத்தியாக்கிரக முறையில் தீர்க்க விரும்பினல் அதாவது மக்கள் கருத்து, அரசாங்க அதிகாரம் ஆகியவற்றிலிருந்து பிரித்துத் தீர்க்க விரும்பினல் நீங்கள் அதிமானச தளத்திற்குப் போயாக வேண்டும். பூமிதான யாத்திரையில் பல நாட்டவருடனும் எனக்கு ஏற்பட்ட தொடர்பிலிருந்து மனம் என்பது எல்லா மக்களுக்கும், உலகத்தார் அனைவருக்கும், ஒரே வகையில் தான் அமைந்திருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டேன். உலகெங்கும் எல்லோரது மனமும் ஒரே வகையில் வளரும் நிலையில் தான் இருக்கிறது. ஆகையால் தனி மனிதனொருவனிடமிருந்து வெளியாகி அகில உலகையும் ஆட்கொள்ளக் கூடிய சக்தி நம்மிடம் இருக்க வேண்டும். தனி மனிதன் தன் வாழ்க்கையில் மனத்தின் எல்லையைக் கடந்து அதி மானச தளத்திற்குப் போக முடியும் பொழுதே உலகம் முழுவதையும் மாற்றியமைக்கக்கூடிய சக்தி உருவாகும்.

### அஹிம்சையின் பொருள்

அஹிம்சை என்றால் என்ன? 'தன்னுயிரைப்போல் மன்னுயிரை நினை' என்பதுதான். அயல் வீட்டாரை உன் வீட்டாரைப் போலும், உன் வீட்டைப் போல் கிராமத்தையும், நினைக்க வேண்டும். இது மிகவும் சிரமமாயிற்றே என்று எவரேனும் சொன்னல் உங்கள் பேச்சு இந்தக் காலத்திற்கு ஒவ்வாதது என்று நான் சொல்வேன். இது விஞ்ஞான காலம். இப்பொழுது வெகு தொலைவிலிருந்தவர்களெல்லாம் மிகவும் நெருங்கி வந்து விட்டார்கள். நாடுகளிடையே இருந்த வித்தியாசங்களெல்லாம் தகர்ந்து போயின. இன்று 24 மணி நேரத்தில் பூமியின் ஒரு ஓரத்திலிருந்து மறு ஓரத்திற்குப் போவதற்கு உதவும் சாதனங்கள் தயாராகிவிட்டன. இந்தப்பூமி 24,000 மைல் சுற்றளவுள்ளது. 24 மணி நேரத்திற்குள் இதை ஒரு முறை சுற்றிவரக்கூடிய சாதனம் உருவாகியுள்ளது. இந்தக் காலத்தில் போய் கிராமம் முழுவதையும் ஒரே குடும்பம் என்று கருதுவது சிரமமென்று சொல்லுகிறவரிடம், "நீங்கள் இப்பொழுது தவறிப் பிறந்திருக்கிறீர்கள். இந்தக் காலத்தில் வாழத் தகுதியில்லாதவர் என்றே சொல்லப்படும். இதில் விளங்கிக் கொள்ள முடியாத சூக்குமமான தத்துவம் எதுவும் இல்லை. மிகவும் எளிய விஷயம இது. கிராமம் முழுவதையும் ஒன்று, ஒரே குடும்பம் என்று எண்ணிக் கொண்டு அதற்கேற்ப எல்லா ஏற்பாடுகளும் செய்து கொள்வோம். நம்மால் இதைக்கூடச் செய்ய முடியாவிட்டால் இந்தக் காலத்திற்கும் நமக்கும் ஒத்துவராது. இப்பொழுது வாழ நமக்குத் தகுதியில்லையென்றேயாகும்.

### சொல்லைக் காப்பாற்ற வேண்டும்

சிறு வயதில் நான் படித்த ஒரு செய்யுளில், தற்புகழ்ச்சி, பிறரைத் தூஷித்தல், பொய் பேசுதல் ஆகிய மூன்றையும் தவிர்க்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது எனக்கு நினைவிருக்கிறது. ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி இருப்பதனல் ஆளும் கட்சி ஓர் அச்சத்துக்கு அடங்கி நடக்கிற தவறான காரியங்களைச் செய்ய அஞ்சுகிறதென்று சொல்லுகிறார்கள். ஆனல் ஆட்சி செலுத்துவோர் அதிகாரத்தை விரும்பியதனலேயே ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள் என்பது ஒரு புறம் இருக்க, எதிர்க் கட்சியாரின் நோக்கமும் தம் கைக்கு எப்பொழுது அதிகாரம் வரும், என்னென்ன செய்தால் வரும் என்பதாக இருப்பதால், எல்லோருமே அதிகாரத்தைத் தான் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று எவர் வாயைத்திறந்து பேசினலும் நம் ஆட்சியை ஆதரித்தே, அதற்கு பலம் தேடவே பேசுகிறார். நாளை பஞ்சம் தோன்றுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். மக்கள் கஷ்டம் தாங்காமல் கூப்பாடு போடுவார்கள். அப்பொழுது எதிர்க்கட்சி என்ன செய்யும்? இதைப் பயன்படுத்திக் கொண்டு தன் கட்சிக்குப் பலம் தேடப் பார்க்கும். இதைக் காணும் ஆளுங் கட்சி, அவர்கள் சொல்வதற்கு நேர் மாறாக நடக்கும். இதனல் ஆளும்கட்சி எதிர்க் கட்சியையும், எதிர்க்கட்சி ஆளும் கட்சியையும் திட்டும். இருவர் திட்டையும் கேட்கும் மக்கள் இருவரையும் திட்டிக் கொண்டிருப்பார்களே தவிர எதிர்க் கட்சியார் சொல்லுவதிலும் மக்களுக்கு நம்பிக்கை இராது. இவ்வாறு சொல்லப்படும் சொல்லில் பொதுவாக எவருக்கும் நம்பிக்கை குறைந்து போகையில் காரியங்கள் நேர்மையாய், ஒழுங்காய் நடப்பதற்கு இடமில்லை. "ஒருவர் சொல்லும் வார்த்தையில் இன்னொருவருக்கு நம்பிக்கை இல்லாது போகையில் அவரிடம் என்ன விருந்தும் இல்லாதது போல்தான்" என்று மனு சொல்லியிருக்கிறார். ஆகையால் நம் வார்த்தையை பிறர் நம்புவதும் பிறர் சொல்லுவதை நாம் நம்புவதும் மிகவும் அவசியம்.

மக்களுக்குத் தலைவர்கள் வார்த்தையில் நம்பிக்கை போய்விடும் பொழுது நாட்டின் நிலைமை திருந்துவதற்கில்லை.

### ஜனநாயகம் என்ற மோசடி

ஒருவர் என்னிடம் 'இதை பண்டித நேரு மட்டும் விளங்கிக்கொண்டுவிட்டால் இது நிறைவேறிவிடும். அவருக்கு விளங்கவில்லை என்றால் ஒன்றும் நடவாது' என்று சொன்னார். இது பெயரளவுக்கு உள்ள ஜனநாயகமே தவிர வேறென்ன? இம்மாதிரியான ஜனநாயகம் தான் ராணுவ ஆட்சியாக மாறுகின்றது. நீங்கள் சேறு தயிராக மாறுவதைக் கண்டதுண்டா? கண்டிருக்கமுடியாது. பால் தான் தயிராக மாறும். ஏனெனில் பாலும் தயிரும் ஒன்றுக்கொன்று நெருங்கியவை. மண் சேறு தயிராக மாறுதென்றால் ஜனநாயகம் எப்படி ராணுவ ஆட்சியாக மாறும்? ஆகையால் இன்று நடப்பது உண்மையில் ஜனநாயகமல்ல என்று தெரிகிறது. இன்றைய ஜனநாயகம், சமூக நல ஆட்சி, சோஷலிசம் ஆகிய எல்லாம் ராணுவத்தை நம்பியே நடக்கின்றன. எல்லோரையும் பாதுகாக்கும் ஒரே தேவதை அந்த ராணுவமாயிருக்கையில் வெவ்வேறு பெயர்கள் சொல்லிக் கொண்ட போதிலும் அவையெல்லாம் ஒன்றே. அவற்றைச் சேர்ந்தவர்கள் தம்முள் சண்டையிட்டுக் கொண்டிருப்பினும் அவர்களிடையே வேற்றுமையிருப்பதாய்க் கொள்ளத் தேவையில்லை. இவர்களுள் ஒருவர் தாம் இம்சையைக் கட்டுப்படுத்தப் போவதாகச் சொன்னலும் நாம் அதை நம்புவதற்கில்லை. ஏனெனில் அவர்கள் அனைவரும் நம்பியிருப்பது ராணுவத்தையே. அவர்கள் எல்லாருமே ஆட்சியை ஒரு சிலரிடம் ஒப்புவித்துவிட்டு சும்மா இருப்பவர்களே. இந்த ஆட்சியில் ஒரு சமயம் அதிகாரம் இவர் கையிலும், ஒரு சமயம் அவர் கையிலுமாக மாறிக்கொண்டேயிருக்கும். ஜனநாயகம் என்ற பெயரில் நடக்கும் இந்த மோசடியிலிருந்து விடுபட்டாக வேண்டும். விடுபட்டால் தான் மக்களுக்கு சக்தி வரும். மக்கள் சக்தி பெறுகையில் தான் உலகில் அமைதி தோன்றும்.

### உலகக் குடிமக்கள் நாம்!

நான் இதுவரை ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை கூட எழுதியதில்லை. ஆனல் ஜெர்மனி, பிரான்சு, அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் நம் இயக்கத்தைப் பற்றி செய்திகள் பரவியிருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன? நான் வெளியிடும் கருத்துக்கள், பூமிதானத் தத்துவங்கள் அந்நாடுகளுக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. உலகெங்கும் இப்பொழுது சர்வோதய தாகம் உண்டாகியிருக்கிறது என்பது தான். நாம் எங்கேனும் ஒரு கிணறு தோண்டினல் அதில் நம் நோக்கம் எதுவாயினும் தாகமெடுத்தவர்களுக்கெல்லாம், இது மிகவும் நல்லகாரியம், இது மிகவும் அவசியம் என்று தோன்றுவது இயல்பு. ஆகையால் உலகக் குடிமகன் என்ற வகையில், நீங்கள் உலகத்திற்கு அளித்ததாகச் சொல்லக்கூடிய காரியம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் மூலம் உங்கள் கிராமத்தில் அப்படி என்ன காரியம் நடக்கிறது? என்பதே கேள்வி. நீங்கள் சாப்பிடுகிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், இன்னும் என்னென்னவோ செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆனல் இவைகளுள் எதையும் உலகத்திற்கு வழிகாட்டி உதவக்கூடியதென்று சொல்லமுடியுமா?

---

## பார்லிமெண்ட் 23-ம் திகதிக்குமுன் கூடும்

கொழும்பு, ஞாயிறு

நவம்பர் 23-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்ட ஜனப் பிரதிநிதிகள் சபையின் கூட்டம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கூடுமெனத் தெரிகிறது.

அவசரகால நிலை நீடிப்பைப் பிரகடனம் செய்வதற்காகவே இவ்விதம் சபை கூட்டப்பட இருக்கிறது.

அவசரகால நிலைமை முன்னர் அறிவித்தபடி நவம்பர் 10-ம் திகதியுடன் முடிவடைகிறது.

அவசரகால நிலமை இவ்வருடம் ஏப்ரல் 17-ம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

---

## சாப்புச் சட்டத்தை மீறியவர்களுக்கு தண்டனை

கொழும்பு, ஞாயிறு

சாப்புச் சட்டத்தை மீறி கடைகளைத் திறந்து வியாபாரம் செய்ததற்காக ஒன்பது கடைக்காரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. கடை திறக்கப்படவேண்டிய நேரத்துக்கு முன்னரும் பூட்டப்படவேண்டிய நேரத்துக்குப் பின்னரும் திறந்து வைத்திருந்ததாக இவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## ஐயாறன் எழுதுவது

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நல்ல தேகசுகத்துடனே சீமையிலிருந்து திரும்பி இருப்பது பெரிதும் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது பலர் செய்த பிரார்த்தனையும் வீண் போகவில்லை.

பார்லிமெண்டில் பார்த்திருக்கிறேன். தேக உபாதி காரணமாக, ஆசனத்திலிருந்து மிக மெதுவாக எழுந்திருப்பார். மிக மெதுவாகப் பேசுவார் பேசுவது சரியாகக் கேட்காது. இவ்வளவு கஷ்டப்படுகிறாரே, ஓய்வெடுத்துக்கொள்ளக்கூடாதா என்று கூடத் தோன்றும். தம் உபாதியையும் பொருட்படுத்தாமல், தியாக புத்தியுடன் தமது கடமைகளைச் செய்து வந்தார்.

தடுப்புக்காவலில் இருந்த அவரை, சிகிச்சைக்காக சீமைக்குச் செல்ல அரசாங்கமும் அனுமதித்தது. இவ்வளவு அசுகதமாகச் செல்லுகிறாரே, என்ன ஆகுமோ என்றும் பலருக்குக்கும் உள்ளூர கவலை. அவருக்குப்பின் யார் என்ற பேச்சுகள் கூட அடிபட்டன.

ஆனல் அவரது துணைவியாரின் பணிவிடையும் தமிழ் மக்களின் அன்பும், சீமை மருத்துவரின் சிக்சையும், தெய்வீக அருளும் சேர்ந்து அவரை குணப்படுத்திவிட்டன.

திரு. எஸ். ஜே. வி. நீடூழி நல்ல சுகத்துடன் வாழவும், இன்றுள்ள பிரச்சினைகளெல்லாம் சுமுகமாகத் தீரவும் எல்லாம் வல்ல திருவருள் துணை செய்யுமாக!

* * *

பிரபல கவிஞரான பரமஹம்ஸதான், இப்போது கொழும்புக்குப் பக்கத்திலே ஓர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகிறார். நேற்று அவரை காணச்சென்றேன். தேகநிலை பெரிதும் குணமடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

அங்குள்ள வியன்ன நிபுணர் மிக அன்புடன் கவனித்து சிகிச்சைசெய்கிறாராம். வார்ட்டுகள் நுழையும் போதே, டாக்டர், தம் இரு கைகளையும்கூப்பி நமஸ்காரம் சொல்லி நோயாளரை புன்முறுவலுடன் சுகம் விசாரிக்கிறாராம்! சில டாக்டர்கள் 'கடு கடு, வெடு வெடு' என்று இருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்களிடம் நெருங்கவே பயமாக இருக்கும்.

மருந்தைவிட, டாக்டர்காட்டும் அன்பு நோயாளரின் உபாதியை வெகுவாக நீக்கிவிடலாம். ஒரு பெரிய டாக்டர், ஊசி குத்து முன்பும், சிகிச்சை செய்யுமுனபும் மௌனமாகப் பிரார்த்தனை செய்வாராம். மருந்தைவிட தெய்வ அருள்தான் நோயை குணப்படுத்துகிறதென்பது அந்தடாக்டரின் உறுதியான நம்பிக்கை.

* * *

நாளைக்கு தீபாவளி. இம்முறை துணி மணிகளெல்லாம் ஏகப்பட்டவிலை மக்களுக்கும் பண முடை. வியாபாரமும் மந்தம்.

நாம் உணவுக்கு மட்டுமன்றி உடைக்கும் கூட வெளிநாடுகளையே எதிர் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். நமக்கு வேண்டிய துணிகளை இங்கு நாமே உற்பத்திசெய்து கொண்டால், வேலையில்லாக் கஷ்டம் குறைவதுடன் நமது நாட்டு செல்வமும் வெளியேறாமல் தடுக்கலாம். இதே நோக்கத்துடன் தான் காந்தி அடிகள் கதர் இயக்கத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். இன்று பாரத நாட்டில் கதர் கைத்தறி மூலம் லட்சக்கணக்கான ஏழைகள் பிழைத்து வருகிறார்கள். அதே போல் கதர் இயக்கம் ஈழநாட்டிலும் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது.

அடுத்த தீபாவளிக்குள்ளாக இங்கு கதர் இயக்கம் ஆரம்பமாகி வளர்ந்தால், வேலையில்லாக் கஷ்டமெனும் நரகாசுரனை வீழ்த்த வழி பிறக்கும்.

# ரூ. 34000 பெறுமதியான பொருள் பறிமுதல் செய்யப்பட்டன

## கள்ளக்கடத்தலின் போது பாக்குத்தொடுவாயில் சம்பவம்

மாவிட்டபுரம், சனி

இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாக 18,000 ரூபாய் பெறுமதியான புளியையும் மற்றும் உணவுப்பொருட்களையும் இலங்கைக்குக் கடத்திவர எத்தனிக்கையில் ஓர் இயந்திரப் படகை இலங்கை கடற்படையைச் சேர்ந்த கஜபாகு என்னும் கப்பல் பாக்குத்தொடுவாய் ஆழ்கடலில் வைத்துக் கைப்பற்றியது.

கடற்படை வீரர்கள், கைப்பற்றப்பட்ட பொருள்களை ஊர்காவற்றுறை பிரதம சுங்க இலாகா பாதுகாப்பு அதிகாரி திரு. செல்வரத்தினத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட படகின் பெறுமதி 16,000 ரூபாய்.

இது சம்பந்தமாக விசாரணை நடத்திய வட பகுதி சுங்க இலாகா அதிகாரி திரு. டி திருநாவுக்கரசு கைப்பற்றப்பட்ட பொருள்களையும் வள்ளத்தையும் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டார்.

# திருடுவதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

புத்தூரிலுள்ள வலிகாமம் கிழக்கு கூட்டுறவுப் பண்டகசாலைச் சமாஜக் கட்டிடக் கூரை ஓடுகளைப்பிரித்து சயிற்றின்வழியாக உட்சென்று திருடமுனைந்த ஒரு கோஷ்டியின் முயற்சியை அக்கோஷ்டியினரின் சொந்த ஆயுதங்களின் சத்தமே முறியடித்துவிட்டதாகத் தெரிகிறது.

இச் சமாஜக் கட்டிடத்தின் கூரை ஓடுகளை எடுத்து உள்ளேநுழைய இத்திருடர்கூட்டம் கடந்த நள்ளிரவு முயற்சித்தது. இதற்காக இக் கட்டடத்தின் மேலே வளைந்து நிற்கும் இலுப்பைமரக் கொம்பரில் கயிறொன்றைக் கட்டி கட்டடத்துக்குள்ளே தொங்கவிட்டிருந்தனர். இந்தக் கயிற்றின் நுனியில் பெட்டிகளை உடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களும், இரண்டு 'டோச்' லைட்டுக்களும் கட்டியிறக்கப்பட்டிருந்தன.

இந்த ஆயுதங்களின் சத்தம் அங்கு படுத்திருந்த காவற்காரரை நித்தரையினின்றும் விழித்தெழச் செய்தது. கள்ளர் கூட்டத்தைத் தனியே சென்று அணுகப் பயப்பட்ட அந்தக் காவற்காரர்சத்தமிட்டு மற்றவர்களை உதவிக்குஅழைத்தார். அங்கு மற்றவர்கள் வருவதற்கிடையில் ஆயுதங்களையும், டோச் லைட்டுக்களையும் கயிற்றில் தட்டித் தொங்கவிட்டவாறே அங்கிருந்து மறைந்து சென்றுவிட்டனர்.

கோப்பாய் பொலிசார்புலன் விசாரணை செய்கின்றனர்.

'ஏ' பிரிவு முதலாவது குழுவில்

# தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி சாம்பியனாக வெற்றிவாகை சூடியது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பாடசாலைகள் உதைபந்தாட்டச்சங்க அமைப்பின் கீழ் நடைபெற்றுவரும் பாடசாலைகளுக் கிடையேயான 'ஏ' பிரிவுக்கான முதலாவது குழுவில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி இவ்வாண்டு சாம்பியனாக கடந்த சனிக்கிழமை வெற்றிவாகை சூடியுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியும் சமமான புள்ளிகளை முன்னர் பெற்றிருந்த போதிலும் வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரியிடம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர்பாராதவிதமாக படுதோல்வியடைந்துவிட்டது. கொக்குவில் இந்துக்கல்லூரி 3-0 கோல்களால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைத் தோற்கடித்துவிட்டது.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் மகாஜனக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டி சமமாக முடிவடைந்துவிட்டது. ஆகவே கோல்களின் சராசரிப்படி தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி இவ்வாண்டுச் சாம்பியனாகத் திகழ்கிறது.

# படகு விபத்து வழக்கில் குற்றப் பத்திரிகை

## 7 பேர் மீது புகார்

திருநெல்வேலி, நவ. 5

இலங்கைப் படகுவிபத்து வழக்கில், கொலை செய்ததாகவும், உடந்தையாக இருந்ததாகவும், 7 பேர்மீது திருநெல்வேலி உதவி மாஜிஸ்டிரேட் கோட்டில் பொலிஸ் இன்று குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர். அந்த விபத்தில் 16 பேர் கடலில் மூழ்கி இறந்தனர். படகுச் சொந்தக்காரரான சூசைமீது தனியாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

1960 ஆகஸ்ட் 19-ம் திகதி மணபாடு அருகில் கடற்கரையிலிருந்து இலங்கையில் கள்ளத்தனமாகக் குடியேற்றுவதற்காக 36 பிரயாணிகளை நாட்டுப்படகு ஒன்றில் எதிரிகள் ஏற்றிச் சென்றதாகவும், அடுத்தநாள் அதிகாலையில் இலங்கைக் கடற்கரை அருகில் படகு சென்றதும் அதிலிருந்து கடலில் குதித்துச் செல்லுமாறு பிரயாணிகள் கோரப்படடதாகவும் குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டது.

கரைசேர்வதற்காக அனைவரும் கடலில் குதித்ததில் 16 பேர் மூழ்கி இறந்ததாகவும், மற்றவர்கள் தப்பிக்கரை சேர்ந்ததாகவும் தெரிகிறது. சடலங்கள் பிறகு மீட்கப்பட்டன. கரை சேர்ந்தவர்களை இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு அனுப்பியுள்ளது. உடல்கள் புகைப்படம் பிடிக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன. அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# பொதுத் தேர்தல் தேதிகள்

புதுடில்லி, நவ. 5

1962 பெப்ரவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலின் தேதிகளைப் பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டு தேர்தல் கமிஷன் சகல ராஜ்யங்களுக்கும் அறிவித்துள்ளது.

கேரளா, பஞ்சாப் தவிர மற்ற எல்லா ராஜ்யங்களிலும் பெப்ரவரி 24, 25ம்தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறும். நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்குக் கடைசித் திகதி ஜனவரி 20, பரிசீலனை 22, வாபஸ் பெறுவதற்குக் கடைசித் திகதி 25.

# ஸி. ஆர். தாஸின் 96 வது பிறந்த தினம்

புதுடில்லி, நவ. 5

தேச விடுதலை இயக்கத்தின் மகத்தான தலைவராகவும், மாபெரும் வழக்கறிஞராகவும், கவிஞராகவும் விளங்கிய தேசபந்து சித்தரஞ்சன தாஸின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது. திரு. ஸி. ஆர். தாஸ் 30 வருடங்களுக்கு முன் பல்வேறு இராஜ துரோக வழக்குகளில் ஆஜராகி தமது அதிசயிக்கத்தக்க வாதத்திறமையால் பல தேச பக்தர்களின் உயிர்களை மீட்டிருக்கிறார். புகழ்பெற்ற வழக்கறிஞரான திரு. தாஸ் விபின் சந்திரராய், அரவிந்த கோஷ் ஆகியோரின் வழக்குகளை நடத்தியவர். அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் அவரது இணையற்ற திறமையினால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்களை உடைத்தெறிந்து பல உயிர்களைக்காப்பாற்றினார். தேசியக் கல்வி சபை என்ற அவர் நிறுவிய ஸ்தாபனம் இப்போது புகழ் மிக்க என்ஜினீயரிங் கல்லூரியாக விளங்குகிறது. "நியூ இந்தியா" என்ற பத்திரிகையை நடத்துவதிலும் அவர் பெருந்தொண்டாற்றினார்.

சித்தரஞ்சனர் பல்வேறு அடக்கு முறைச் சட்டங்களை மீறி, துணிச்சலான கருமங்கள் ஆற்றி அதன் பயனாக சிறை சென்ற தியாகியாகும். 1921 ம் ஆண்டில் அந்நியத் துணி பகிஷ்காரத்திலும், கதர் விற்பனையிலும் தீவிரமாகப் பங்கு பற்றியதுடன், வேல்ஸ் இளவரசர் பகிஷ்காரத்தில் முன்னணியில் நின்றார்.

அலகாபாத் காங்கிரஸில் அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தன் தலைமை உரையைச் சிறையிலிருந்தே எழுதி ஸ்ரீமதி ஊர்மிளா தேவி மூலம் காங்கிரஸ் மகாநாட்டுக்கனுப்பி அதைப் படிக்கச் செய்த திரு. ஸி. ஆர். தாஸ் சட்ட சபைப் பிரவேசத்தை ஆதரித்து சுயராஜ்யா கட்சியை ஆரம்பித்தார். இதனால் காந்திஜியுடன் அவருக்கு அபிப்பிராயபேதம் ஏற்பட்டது.

வங்காள சட்ட சபையையும், கல்கத்தா கார்ப்பரேஷனையும் அவரது சுயராஜ்யா கட்சி கைப்பற்றியது. கல்கத்தா கார்ப்பரேஷனுக்கு மேயராய் இருந்த தாஸ், சட்ட சபையில் மந்திரி சபை அமைக்க மறுத்ததுடன், எதிர்க் கட்சியிலிருந்து அரசாங்கத்துக்கு 3 வருடங்கள் தோல்விக்குமேல் தோல்வியை உண்டாக்கினார். தன் சொத்துக்களை தர்மத்துக்கும், பெண் கல்விக்கும் எழுதி வைத்துவிட்டு 1925 ம் ஆண்டு ஜூன் மாதம் அவர் காலமானார். அவரது பெயரைக் கொண்டே கல்கத்தாவில் "சித்தரஞ்சன் ரயில்வே தொழிற்சாலை" ஆரம்பிக்கப்பட்டது.

# நாவாந்துறை கொலை வழக்கு

## இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாவாந்துறை கொலைவழக்கில் முடிக்குரியதரப்பு விசாரணைகள் முடிவடைந்து விட்டன. எதிரி தரப்பு வழக்கறிஞர் இம்மாதம் 18-ம் திகதி தமது தொகுப்புரையை நிகழ்த்துவார்.

நாவாந்துறையைச் சேர்ந்த லோறன்ஸ் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக செல்லத்தம்பி ஆசீர்வாதம் என்பவர்மீது யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். வல்லிபுரத்தினால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசு வால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரியின் சார்பில் திரு. சாம். ஏ. சபாபதி திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் ஆஜராயிருந்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வல்லிபுரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது :—

துப்பாக்கிச் சூடு சம்பவம் அறிவிக்கப்பட்டதும் நான் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குச் சென்றேன். அப்பொழுது துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்தவருக்கு டாக்டர் சிகிச்சையளித்துக் கொண்டிருந்தார். காலஞ்சென்றவர் கதைக்கமுடியாத நிலையில் இருந்தார். இதன்பின் நான் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று சாட்சியங்களைப் பதிவுசெய்ததோடு வழக்கோடு சம்பந்தப்பட்ட பொருட்களையும் எடுத்துக்கொண்டேன். எதிரியை 10-8-61ல் பண்ணையில் வைத்து கைதுசெய்தேன்.

சில பொலிசாரும் சாட்சியமளித்தபின் மேல் விசாரணை இம்மாதம் 18-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# ஸிரியாவுக்கு இந்தியா அங்கீகாரம்

புதுடில்லி, நவ. 5

ஸிரியாவின் சுதந்திர அரசாங்கத்தை இந்தியா அங்கீகரித்துவிட்டது. டமாஸ்கஸிலுள்ள இந்திய கான்சல் ஜெனரலின் அந்தஸ்து தூதர் அந்தஸ்துக்கு உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

# கல்கத்தாவில் அரபுலீக் தகவல் நிலையம்

புதுடில்லி, நவ. 6

அரபுலீக், கல்கத்தாவில் ஒரு தகவல் நிலையத்தை ஆரம்பிப்பதென முடிவுசெய்திருக்கிறது.

# இராணுவ வரலாற்றை அன்டன்முத்துக்குமாரு எழுதுகிறார்

கொழும்பு, ஞாயிறு

பாகிஸ்தானில் இலங்கை ஹைகமிஷனராக இருக்கும் மேஜர் ஜெனரல் அன்டன் முத்துக்குமாரு இலங்கையின் ராணுவ வரலாற்றை எழுதி வருகிறார் எனத் தெரிகிறது.

1959-ம் ஆண்டில் மேஜர் ஜெனரல் போர்த்துக்கல் தேசம் சென்றிருந்தபோது அங்குள்ள இராணுவ சரித்திர வல்லுனரைக்கண்டு அவர்களுடன் கலந்துபேசினார். இதே ஆண்டில் ஒல்லாந்து தேசமும் சென்று அங்குள்ள இராணுவ சரித்திர வல்லுனரையும் கண்டார். இலங்கை இராணுவ சரித்திரத்தைத் திறம்பட எழுதும் நோக்கத்துடனேயே இவர் இந்த சரித்திரவல்லுனர்களைச் சந்தித்தார்.

# எஸ். ஜே. வி...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

டக்களப்பு, திருக்கோணமலை, வவனியா, மன்னார் ஆகிய இடங்களிலிருந்தும் பலர் திரு. எஸ். ஜே. வி. யை வரவேற்பதற்காக இரத்மலானை விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து பிஷப் குலேந்திரனும் திரு. செல்வநாயகத்தை வரவேற்க விமான நிலயத்துக்கு வந்திருந்தார்.


நியூடோன் எலக்ரிக்கல் கிளை ஸ்தாபன திறப்புவிழா




எங்கள் கிளை ஸ்தாபனம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 228-ம் இலக்க ஸ்தாபனத்தில் 6 - 11 - 61 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

ஆகவே எங்கள் வாடிக்கைக்காரருக்கும் மற்றும் ஏனையோருக்கும் அறியத்தருவது

மின்சார ஒப்பந்த வேலைகளுக்கும்
மின்சார இலுமினேசன் (Illumination) வேலைகளுக்கும்
ஏனைய வியாபார விஷயங்களுக்கும்

6 - 11 - 61-ல் இருந்து மேற்காட்டிய ஸ்தாபனத்தில் தொடர்பு வைக்கவும்.

கே. கே. எஸ். ரோட், கொக்குவில்.

228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# "யோகாசனம் பயிலுவதற்கு வயதுக்கட்டுப்பாடு கிடையாது"

## கோப்பாயில் சுவாமி சச்சிதானந்தா

கோப்பாய், சனி

"யோகாசனத்தில் பயிற்சி பெறுவதற்கு வயதுக் கட்டுப்பாடு கிடையாது. இதனைச் சிறுமி முதல் பல்லுபபோன கிழவிவரை பயிலலாம். தீங்கு எதுவும் நேராது. ஆனல் அதிலும் ஒழுங்கு தவறுமாஞல் தீமையைச் சிலர் தேடிக் கொள்கிருர்கள்."

இவ்வாறு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது யோகிராஜ் சச்சிதானந்தா குறிப்பிட்டார். கூட்டம் இக் கல்லூரி அதிபர் திரு. எஸ். நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது.

யோகிராஜ் சச்சிதானந்தா மேலும் கூறியதாவது:

குறுகிய நோக்கத்துடன் நாம் சமய வாழ்வு வாழ்வதால் வேற்றுமைகள் வளருகின்றன. பல்வகைப்பட்ட சமயங்களுக்கும் அடிப்படையில் வேற்றுமை கிடையாது. நாம் நோக்கத்தையும் அடிப்படை நோக்கத்தையும் அறிந்தோமானல் எமக்கு வேற்றுமை தலையெடுக்காது. நாம் எல்லோரும் இறைவனுடைய குழந்தைகள் என்ற பரந்த மனப்பான்மை எம்மிடையே பெருகவேண்டும். நேச மனப்பான்மையை வளர்த்தால் ஒருமைப்பாடு வளர ஏதுவாக இருக்கும்.

கூட்ட முடிவில் சுவாமிஜியால் ஒரு பொதுப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

## கல்வி மந்திரிமீது பத்தேகம எம். பி. புகார்

பத்தேகம, வியாழன்

"தேசியக் கல்விமுறை ஒன்றுக்கு அரசாங்கம் பாட்டுப்பாடி அபிநயம் நடிக்கப்பார்க்கிறது. இப்படியான கல்வி முறையொன்றை ஒரு முஸ்லிம் கல்வி அமைச்சராக இருக்கும் காலத்தில் உருவாக்க நினைப்பது ஒரு கேலிக்கூத்தாகும். எமது கல்வியின் பொறுப்பை வெற்று நாட்டவர் கையில் நாம் விடமுடியாது."

இவ்வாறு பத்தேகம எம். பி. திரு. நீல். டி' அல்விஸ் கேரடவல—மாஜுவன மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஆண்டுவிழாவில் பேசுகையில் கூறினர். அவர் தொடர்ந்து கூறியதாவது:

"நாட்டிலுள்ள பல பள்ளிக்கூடங்களில் இப்போது ஆசிரியர் போதாககுறை உண்டு. விசேஷ சித்திபெற்ற எஸ். எஸ். சி. தராதரமுடையோர் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இருந்தும், அவர்களை ஆசிரியர்களாக நியமிப்பதற்குக் கல்விமந்திரி மறுத்துள்ளார். ஆனல் சென்ற ஆண்டில் எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்துள்ளவர்களை முஸ்லிம் பள்ளிக்கூடங்களில் காலியாகவுள்ள ஆசிரிய ஸ்தானங்களில் அமர்த்துவதற்கு கல்விமந்திரி ஆரம்பித்துவிட்டார்."

## ஐந்து வருட ஒப்பந்தம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க சேவையாளர்களாக ஐந்து ஆண்டுகள் கடமையாற்றுவதாகப் பிணைப்பத்திரமொன்றில் கைச்சாத்திடும்படி விஞ்ஞான, தொழில் நுட்ப வைத்தியப்பகுதிச் சேவையாளர்களைக் கேட்டுக்கொள்வதற்கான மசோதாவை அரசாங்கம் அடுத்த மாதம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கும்.

நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா சமர்ப்பிக்கவிருக்கும் இம் மசோதாவொன்றில் இந்த மசோதாவும் அடக்கியிருக்கும் என அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன. சுகாதார இலாகாவின் ஐந்து ஆண்டு ஒப்பந்தத்துக்குக் கைச்சாத்திட மறுத்துள்ள வைத்திய பட்டதாரிகளுக்கும் மேற்படி பிணைப்பத்திரத்தில் கைபொப்பமிட வேண்டிவரும்.

விஞ்ஞான தொழில் நுட்ப வைத்தியத் துறையில் சேவையாற்றுவோர்களுக்கான இப்புதிய ஐந்தாண்டு ஒப்பந்தம் அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதாகையால் டாக்டர் பட்டதாரிகள் சுகாதார இலாகாவுடன் பிரத்தியேக ஒப்பந்தம் ஏதற்கும் கைச்சாத்திடவேண்டியதில்லை. அடுதத மாதம் பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதற்கென இப் புதிய சட்டத்துக்கான மசோதா தயார் செய்யப்படுகிறது.

# ஒதுக்கப்பட்ட பணத்துக்கு வேலை நடைபெறவில்லை

## வவனியா எம். பி. தகவல்

முள்ளியவளை, வெள்ளி

"வடபிரதேசத்துப் பொது மராமத்து வேலைகளுக்கெனக் கடந்த ஆண்டு, ரூ. 4,50,000 ஒதுக்கப்பட்டிருந்தது. ஐந்து எஞ்ஜினியர் உள்ள வடபிரதேசத்தின் ஒவ்வொரு எஞ்ஜினியரும், ரூ. 90,000 க்கு வேலை செய்ய வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது, என்று வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

"கடந்த வருடம் வவனியாவில் நடைபெற்ற இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் வவனியா, முல்லைத்தீவு ஆகிய இரு இடங்களிலுமுள்ள எஞ்ஜினியர்மார்களும் செய்ய வேண்டிய வேலைகள் வரையறுக்கப்பட்டன. வவனியாவைப் பொறுத்தவரை, மேலதிகமாகவே வேலை நடைபெற்றிருக்கிறது. முல்லைத்தீவு வேலைகள் நடைபெறவில்லை. ஒதுக்கப்பட்டபணமும், வட பிரதேசத்திலுள்ள வேறொரு எஞ்ஜினியர் பகுதிக்குப் போய்விட்டதாக அறிகிறேன்".

தண்ணீர்முறிப்பு விவசாயிகள் கோஷடி ஒன்று, வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரத்தைச் சந்தித்து, குமிழமுனை-தண்ணீர் முறிப்புத் தெருவின் அவலநிலை குறித்து முறையிட்ட போதே வவனியாய் பிரதிநிதி, மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

## தொழிற்சங்க சம்மேளன மகாநாடு

பண்டாரவளை, சனி

நவம்பர் மாதம் பிற்பகுதியில் கொழும்பில் நடக்கவிருக்கும் இலங்கை தொழிற் சங்க சம்மேளன மகாநாட்டில் கலந்துகொள்ள லங்கா தோட்டத் தொழிலாளர்சங்க' அப்புதளை கிளை ஒழுங்கு செய்து வருகிறது. மகாநாட்டில் கலந்து கொள்ள பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாநாட்டில் நடக்கவிலுகும் கலைவிழாவில் "தோட்டத் தொழிலாளியும் தொழிற் சங்கமும்" என்றநாடகமும்நடிப்பதற்காக, தொண்டர்களில் சிலருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டும் வருகிறது.

## மடம் அமைக்கமுயற்சி

ஊர்காவற்றுறை, சனி

சரவணை முச்சந்தியில் பிரயாணிகள் தங்குவதற்கு ஓர் மடம் அமைப்பதற்கு சரவணை கிராம முன்னேற்றச் சங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக அரசினரின் நன்கொடையைப் பெறுவதற்கு சங்க நிர்வாகிகள் முயற்சி செய்து வருகின்றனர்

## நெடுந்தீவில் நாவலர் நாடக மன்றம்

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்திவு இளைஞர்களால் இங்கு நாவலர் நாடக மன்றம் என்ற பெயரில் ஓர் நாடக மன்றம் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது.

நெடுந்தீவு சனசமூக நிலைய மண்டபத்தில் திரு. இ. யோண்பிள்ளை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. உத்தியோகத்தர் தெரிவில் தலைவர்களாக திரு. எஸ். மகேசும், திரு. கே. வையித்திலிங்கமும், செயலாளர்களாகத் திரு. கே. மருதயினரும், செல்வன் ஜி. எஸ். பெனடிற்றும், பொருளாளராகவும் பரிசோதகராகவும், திரு. எஸ். சின்னத்துரையும், திரு. என். இலட்சுமணராசாவும், தெரிவு செய்யப்பட்டனர்.

பொங்கல் தினத்தன்று சரித்திர நாடகத்தை அரங்கேற்றுவதென முடிவு செய்யப்பட்டது.

## கொழும்பு இந்து வாலிபர் சங்கம்

### புதுவருட நிர்வாகிகள்

கொழும்பு, வியாழன்

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர்: திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. உபதலைவர்கள்: திரு. மு. கு. இரத்தினகோபால், திரு. ச. சுபபையா, திரு ச. சேதுநாதன், பொதுச்செயலாளர்: திரு செ. ச. அருணசலம், துணைச்செயலாளர்கள: திரு. ம. நமசிவாயம், திரு. சி. கந்தசாமி, பொருளாளர்: திரு சி. கதிரவேலு, உதவிப்பொருளாளர்: திரு. சிவ. கந்தசாமி, நூலகப் பொறுப்பாளர்: திரு. ச. சுப்பையா, இந்து இளைஞர் ஆசிரியர்: திரு. சோ. பத்மநாதன், கணக்குப் பரிசோதகர்: திரு. எஸ். பாலசுந்தரம்.

செயறகுழு உறுப்பினர்கள்: திருவாளர்கள்: கெ. செந்திச்செல்வன், க. ச. கணபதிப்பிள்ளை, சி. மகேசன், ச. திருச்செல்வம், கு. நமசிவாயம், ஆ. தருமலிங்கம், சோ. முத்து, இராசசுந்தரம், கந்தையா, சிவநாதன், து. வைத்திலிங்கம்.

# தற்போதைய தலைவர் போட்டியின்றித் தெரிவு

## வல்வெட்டித்துறைபட்டினசபை; நியமனப்பத்திரங்கள் தாக்கல்

வல்வெட்டித்துறை, சனி

யாழ்ப்பாணப் பகுதி உதவித் தேர்தல் உத்தியோகத்தரால் நேற்று வல்வெட்டித்துறைப் பட்டினசபைக்குப் புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

முதலாம் வட்டார அங்கத்தவரும் தற்போதைய பட்டினசபைத் தலைவருமான திரு. க. சபாரத்தினம் போட்டியின்றி அதே வட்டார அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். போட்டியிடும் மற்ற அபேட்சகர்களின் விபரம் பின்வருமாறு:

2ம் வட்டாரம்: திரு. க. நாகாயணசாமி, திரு. பொ. வேலும்மயிலும் (தற்போதைய அங்கத்தவர்).

3ம் வட்டாரம்: திரு. ஆ. குகலிங்கம், திரு. சோ. சுந்தரலிங்கம் (தற்போதைய அங்.), திரு. ஐ. திருப்பதி.

4ம் வட்டாரம்: திரு. சு. கதிரிப்பிள்ளை அல்லது ஸ்ரீரங்கம், திரு. செ. செந்திவேல்.

5ம் வட்டாரம்: திரு. க. ஆறுகம், திரு. நா. பாய்க்கியலிங்கமும்.

தற்போதைய நாலாம் வட்டார அங்கத்தவர்: திரு. தா. சி. நாகரத்தினமும், ஐந்தாம் வட்டார அங்கததவர்: திரு. க. சின்னத்தம்பியும் இத்தேர்தலில் கலந்துகொள்ளவில்லை.

## இணைப்புக் கமிட்டிக் கூட்டம்

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலை, மூதூர்த் தொகுதிகளின் மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டம் இம் மாதம் 11ந் திகதி திருமலைக் கச்சேரியில் திருமலை மாவட்ட அதிபர் திரு. டி. எம். ஏ. ஸ்பெல்டிவின்ட் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

## மீன்கள் அழிக்கப்பட்டன!

திருக்கோணமலை, சனி

டைனமட் வைத்துப்பிடிக்கப்பட்ட மீன்களைத் தங்கள் பொறுப்பில் வைத்திருந்ததாக திருமலைப் பகுதி பொலிஸ் சார்ஜன்ட் திரு. பி. சிவராசா தலைமையில் சென்ற ஓர் குழு, உப்புவெளியைச் சேர்ந்த எம். எஸ். புகாரி, கே. ஜி. டி. சில்வா ஆகிய இருவரையும் கைது செய்து திருமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்தனர். திருமலை நீதவான் எதிரிகளிருவரையும் முறையே 500 ரூபா 1,000 ரூபா பிணைகளில் விடுதலை செய்து, வெடிவைத்துப் பிடிக்கப்பட்ட மீன்கள்முழுவதையும் அழிக்கும்படி உத்தரவிட்டார். இந்த உத்தரவின் பேரில் ரூபா 2,000 பெறுமதியான பதினேழு பெட்டிகள் கொண்ட மீன்களை பொலிசார் அழித்தனர்.

## பாடசாலை அதிபர்கள் நியமனம்

கொழும்பு, வெள்ளி

சமய அடிப்படையில் பள்ளிக்கூட அதிபர்களை நியமிப்பது எனக் கல்வி இலாகா தீர்மானித்துள்ளது. தன் பயனாக பெருந்தொகையான பள்ளிக்கூட அதிபர்களை இடமாற்றம் செய்யவேண்டி நேரிடும். ஒரு பள்ளிக்கூடத்தில் பெரும்பான்மையான மாணவர்கள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிருர்களோ அந்தச் சமயத்தைச் சேர்ந்தவராக பள்ளிக்கூட அதிபர் இருக்கவேண்டுமென்பதே கல்வி இலாகாவின் தீர்மானமாகும். உதவி அதிபர்களின் நியமனத்திலும் இந்த விதியையே கடைப்பிடிப்பது எனக் கல்விப்பகுதி தீர்மானித்துள்ளது.


RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

மொத்த விற்பனை விநியோகஸ்தர்கள்:
- மில்லஸ்ர் லிமிட். கொழும்பு.
- எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருணுகலை.
- என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
- கபூர்ஸ் ஹார்ட்வெயார், இரத்தினபுரி.
- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்
- எச். ஏ. பகஸ்ராவல அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். கே. பிட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே
பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை
யளிப்பதும் இதுவே







முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

## வெற்றி தோல்வி இல்லை

மாவிட்டபுரம், வெள்ளி தெல்லிப்பழை மாகாஜனக் கல்லூரி 2-ம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இருகோஷ்டிகளும் தலா 1 கோல் போட்டமையால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

---

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

முள்ளியவளை, ஞாயிறு ஏழு கோஷ்டிகள் பங்குபற்றும் வவனியா உதைபந்தாட்டச் சுற்றுப்பாபட்டி கடந்த 3-ம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

## பலாலி-மகாரகமை

உடுப்பிட்டி, ஞாயிறு கடந்த சனிக்கிழமை யன்று பலாலி-மகாரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் கூட்டு விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. மகாரகம அதிபர் திரு. டி. ஜி. சுகததாசாவின் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் மகாரகம வீராங்கனைகளின் சாதனைகள் போற்றத்தக்கதாயிருந்தன. கயிறிழுப்புப் போட்டியில் பலாலிக் கோஷ்டியினர்வெற்றி பெற்றனர்.

திருமதி சுகததாசா பரிசில்களை வழங்கினர்.

---

## ஆசிரியர் கோஷ்டி தோல்வி

உடுப்பிட்டி, ஞாயிறு நெல்லியடி மத்திய வித்தியாலய ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மாணவர் கோஷ்டி ஆசிரியர் கோஷ்டியை 2-0 கொல்களால் தோற்கடித்தது.

திரு. வி. சிவலிங்கம் மத்தியட்சம் வகித்தார்.

## சென்பற்றிக்ஸ் வெற்றி

உடுப்பிட்டி, ஞாயிறு சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் முதலாம் பிரிவுக் கோஷ்டி 1—0 கோல்களாலும் 2-ம் பிரிவுக்கோஷ்டி 3-2 கோல்களாலும் ஹாட்லியைத் தோற்கடித்தது. 1-ம் பிரிவுக்கு திரு. எஸ். ஜி தேவா மத்தியட்சம் வகித்தார். 2-ம் பிவுப் போட்டிக்கு திரு எஸ் அருமைநாயகம் மத்தியட்சம் வகித்தார்.

## இந்துக் கல்லூரி ஈட்டிய வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி யாழ்ப்பாணம் விளையாட்டுச் சங்கத்தால் நடாத்தப்படும் உதை பந்தாட்டப் போட்டி அமைப்பின்கீழ் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 2-ம் பிரிவு கோஷ்டிக்கும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் இந்துக்கல்லூரி 4—0 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுள்ளது. திரு. சு. பாஸ்கரன் மத்தியஸ்தராக கடமையாற்றினர்.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் போஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெடோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.


## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

திங்கள் 6-11-61

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6 50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிளாரினட், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-15 நேயர் விருப்பம், 7-30 கமலா கிருஷ்ணமூர்த்தி—வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 எவ். எக்ஸ நடராஜா—பேச்சு, 9-30 மகராஜபுரம் வி. சந்தானம்—பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள் 7-30 வி.கிருஷ்ணமூர்த்தி பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1-30 வாத்திய இசை 1-50 குரல்இசை.

மாலை 4-45 வி விதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 எம் பாலமுரளி கிருஷ்ண — பாட்டு. 9-30 கலைஞர்களின் கச்சேரி.

---

## வடமாகாண கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

காங்கேசன் துறை ரேயல் விளையாட்டுக் கழகத்தால்வருடாவருடம்நடத்தப்பட்டு வரும் வடமாகாண கோஷ்டிகளின் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது வருடாந்த போட்டி இம்மாதம் 4 ம் திகதி ரேயல் விளையாட்டுக்கழக கைப்பந்தாட்டத்திடலில் ஆரம்பமாகவிருக்கிறது.

கடந்த வருடம் இச்சுற்றுப் போட்டியில் 10 விளையாட்டுக் கழகங்கள் மட்டுமே பங்குபற்றின. இவ்வருடம் பன்னிரண்டு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுவதால்போட்டி மூன்று பிரிவுகளாகக் நடைபெறும்.

"ஏ" பிரிவு: மாதகல் சென். தாமஸ் விளையாட்டுக் கழகம், காங்கேசன் துறை சென்றல் விளையாட்டுக் கழகம் புன்னாலைக்கட்டுவன் விளையாட்டுக் கழகம், காங்கேசன் துறை ஸ்புட்ணிக் விளையாட்டுக் கழக "ஏ" கோஷ்டி.

"பி" பிரிவு: காங்கேசன் துறை ஸ்புட்ணிக் விளையாட்டுக்கழக, "பி" கோஷ்டி, கலட்டி காந்திஜி கைப்பந்தாட்டக் கழகம் தையிட்டி ஸ்ரார்ஸ்விளையாட்டுக் கழகம், தன்னாகம் ஜெக்கெட் வி. க.

"சி" பிரிவு: கொல்லங்கலட்டி யூனைட்டட் விளையாட்டுக் கழகம் புன்னாலைக்கட்டுவன் ஆனந்தா கோஷ்டி, வல்வெட்டித்துறை நெடிய காடு வி. க, மாவிட்டபுரம் யூனைட்டட்டுக் கழகம்,

---

## வடமராட்சி உதைபந்தாட்டப்போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, புதன் நெல்லியடி மத்திய வித்தியாலயக் கோஷ்டிக்கும் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஒவ்வொரு கோஷ்டியும் தலா ஒரு கோல் போட்டன. திரு. டி. இரத்தினசிங்கம் மத்தியட்சம் வகித்தார்.

கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி கட்டைவேலி ஞானசாரியார் 3 வதுபிரிவுக் கோஷ்டியை 3 கோல்களால் தோற்கடித்தது.

# கலை அரங்கம்



எந்தப் பாகத்தையும் குறைவின்றி நடித்து விடும் நடிகை எம். என். ராஜம் 'பிறந்த நாள்' படத்தில் பிரமாதமாக நடித்திருக்கிருராம்.

# குல்லாப்போட்ட அசோகன்!

பூப்போட்ட முஸ்லிம் குல்லாவுடன் ஏ. வி. எம். ஸ்டுடியோவுக்குள் திடீரென்று நுழைந்தார் நடிகர் அசோகன். அவரைப்பார்த்ததும் 'குல்லா நன்ருக இருக்கிறதே! எனக்கு ஒன்று கொடுங்களேன் 'என்று ஏ. வி. எம். படத்தை டைரக்ட் செய்யும் திரு, லோககுந்தர் கேட்டார்.

தன்கைவசமிருந்த மற்ருெரு குல்லாவை நடிகர் அசோகன் எடுத்து திரு. லோகசுந்தரத்தின் தலையில் போட்டார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஏ. வி. மெய்யப்பனின் மகனை தயாரிப்பாளர் எம். சரவணன், "என்ன அசோகன்! டைரக்டருக்குக் குல்லாப் போடுகிறீர்களா? குல்லாப் போட்டாலும் நல்ல குல்லாவாகத்தான் போட்டிருக்கிருர்கள். எனக்கும் ஒன்று கொடுங்களேன்" என்ருர்.

"ஏது! ஏது! இந்தக் குல்லாவுக்கு இருக்கும் கிராக்கியைப் பார்த்தால் நான் குல்லாவியாபாரத்தை 'சைட் பிசினசாக' வைத்துக்கொள்ளலாம்போல் தெரிகிறதே" என்று அசோகன் பதிலளித்ததும் எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தார்கள்.

—

## "உள்ளத்தினல் உணர்ந்துகொள்ள முடியாதோ"

"கண்கள் இரண்டும் தேவையில்லை காண்பதற்கு. காது இரண்டும் தேவையில்லை கேட்பதற்கு. உள்ளத்தினல் உணர்ந்துகொள்ள முடியாதோ?" என்று கண்ணீர்விட்டு அழுதபடியே நடிகை வசந்தி பாடிய காட்சி பி. வி. என். புரடக்ஷன்ஸின் படத்துக்காக சமீபத்தில் படமாக்கப்பட்டது.

உள்ளத்தைத்தொடும் வகையில் இப்படத்தில் நடிகை வசந்தி நடித்துள்ளார்.

## மலையாளத்தில் 'லைலா மஜ்னு'

### பிரேம்நஸீர்– விஜயலட்சுமி ஜோடி

பலமொழிகளிலும் வெளிவந்த காதல் காவியமான 'லைலாமஜ்னு' இப்பொழுது மலையாளத்திலும் உருவாகி வருகிறது. நடிகை விஜயலட்சுமியும் பிரேம் நஸீரும் இப்படத்தில் ஜோடியாக நடிக்கின்றனர்.

பாஸ்கர் டைரக்ட் செய்யும் இப்படத்தை கேரளா பிக்சர்ஸார் தயாரிக்கிருர்கள்.

ஞானசௌந்தரி என்ற மலையாளப்படத்திலும் விஜயலட்சுமி நடித்துவருகிருர்.

—

## "பார்த்தால் பசிதீரும்"

சிவாஜி கணேசன், சரோஜாதேவி, ஜெமினி கணேசன், சாவித்திரி, சௌகார் ஜானகி, தங்கவேலு, எம். சரோஜா ஆகியோர் நடித்துள்ள "பார்த்தால் பசிதீரும்" என்ற படம் பொங்கல் திருநாளன்று திரைக்கு வரவிருக்கிறது.

திரு. லோககுந்தர் எழுதிய இக்கதைக்கு ஆரூர்தாஸ் வசனமெழுதியுள்ளார். ஏ. பீம்சிங் இப்படத்தை டைரக்ட் செய்துள்ளார்.

# எம். ஜி. ஆர்., - எம். ஆர். ராதா இலங்கை வருவர்

## தேவர் பிலிம்ஸ் படத்துக்கு இங்கு சில காட்சிகள்

### சரோஜாதேவியும் வருவார்

தேவர் பிலிம்சார் விரைவில் இலங்கைக்கு வந்து சில வெளிப்புறக் காட்சிகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளனர். இலங்கைக்கு வந்து சில காட்சிகளைப் படமாக்குவதற்கு அரசாங்கத்தின் அனுமதியை தேவர்பிலிம்சார் கோரியுள்ளனர்.

'தாய் சொல்லைத் தட்டாதே' என்ற படத்தைத் தயாரித்து முடித்து விட்ட தேவர் பிலிம்சார் தமது அடுத்த படத்துக்கு 'வேட்டைக்காரன்' என்று பெயரிட்டுள்ளனர்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., சரோஜா தேவி, நடிகவேள் எம். ஆர். ராதா, அசோகன், தங்கவேலு, கண்ணும்பா, ஆகியோர் புதிய படத்தில் நடிக்கிருர்கள்.

இலங்கையில் வெளிப்புறக் காட்சிகள் எடுப்பதற்கு அனுமதி கிடைத்தால், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., நடிக வேள், சரோஜா தேவி ஆகியோர் இலங்கைக்கு வரக்கூடுமெனத் தெரியவருகிறது.

—

## தீபாவளிக்கு திரைக்குவரும்படங்கள்

நாளை தீபாவளி. தீபாவளிக்குத் திரைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ள ஐந்து படங்கள் வருமாறு;-

பத்மினி பிக்சர்ஸாரின் 'கப்பலோட்டிய தமிழன்' நாளை திரைக்கு வருகிறது. சிவாஜி கணேசன் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனராக நடிக்கிருர். இப்படத்தில் பாரதியாராக வருகிருர் எஸ். வி. சுப்பையா. ஜெமினி கணேசனும் சாவித்திரியும் காதல்ஜோடியாக வருகின்றனர். பாலாஜி, ஜெமினி கணேசன், சந்திரா, குமாரி ருக்மணி, ரங்கராவ், அசோகன், டி. கே. சண்முகம், டி. எஸ். துரைராஜ் ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் வசனத்தை எஸ். டி. சுந்தரம் எழுதியுள்ளார். தயாரிப்பாளர் பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்துள்ளார்.

### பணம் பந்தியிலே'

ஏ. ஏ. வி. பிக்சர்ஸாரின் பணம் பந்தியிலே என்ற படமும் நாளை திரைக்குவருகிறது. எம். ஆர். ராதா, எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, புஷ்பலதா ஆகியோர் நடித்துள்ள இப்படத்தை கிருஷ்ணராவ் டைரக்ட்செய்துள்ளார்.

### இந்திரஜித்

அஞ்சலிதேவி, ராமராவ் நடித்த 'இந்திரஜித்' என்ற மொழி மாற்றப்படமும் நாளை திரைக்கு வரவிருக்கிறது.

### பாக்கியலட்சுமி

தீபாவளிக்கு வெளிவரும் மற்ருெருபடம் 'பாக்கியலட்சுமி' இப்படத்தில் சௌகார் ஜானகி 'பாக்கியலட்சுமி'யாக நடிக்கிருர். ஜெமினிகணேசன், ஈ. வி. சரோஜா, கண்ணும்பா, ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் கதைவசனங்களை எழுதிய கே. வி. சீனிவாசனே இதை டைரக்ட் செய்துள்ளார்.

### 'தாய்சொல்லைத் தட்டாதே'

நாளை வெளிவரும் படங்களுள் தேவர் பிலிம்சாரின் 'தாய் சொல்லைத் தட்டாதே' என்றபடமும் ஒன்று. சரோஜாதேவி, எம். ஜி ஆர் எம் ஆர் ராதா, அசோகன், கண்ணும்பா, ராஜகோபால், ஆகியோர் இப்படத்தில் நடித்துள்ளனர் சிறுத்தை, காட்டுப்பன்றி சண்டைகளும் இப்படத்திலுள்ளன.

## "போனல் போகட்டும் போடா!"

கருத்துள்ள பாட்டுக்கள்தான் இப்போது ரசிகர்கள் மனதில் நன்ருக இடம்பெறுகின்றன. இரண்டு நாட்களுக்கு முன் என் வீட்டில் ஒருவர் காரைக் கொண்டுவந்துமோத விட்டுவிட்டார். வீட்டுச் சுவர் உடைந்துவிட்டது.

இதனல் எனக்கும் கார்க்காரருக்கும் தகராறு ஏற்பட்டது. இதை வேடிக்கைபார்க்க கூட்டம் கூடிவிட்டது. ரிக்சாக்காரர்களும் மற்றவர்களும் நின்று வேடிக்கை பார்த்தார்கள். அப்போது கூட்டத்தில் நின்றசிலர் என்னைப் பார்த்து "போனல் போனல்போகட்டும் போடா" என்று பாட ஆரம்பித்து விட்டார்கள்." என்று இரட்டை இசைஅமைப்பாளர்களான விஸ்வநாதம்-ராமமூர்த்தியர்களில் ஒருவரான விசுவநாதம் தெரிவித்தார்.

ஏ. வி. எம். ஸ்ருடியோ கண்ணதாசனும் இசையமைப்பாளர்கள் விசுவநாதம் - ராமமூர்த்தி ஆகியோரும் வந்திருந்தபோதே இத்தகவலை விசுவநாதம் வெளியிட்டார்.

## 'நெஞ்சில்ஒரு ஆலயம்' 20 நாள் தயாரிப்பு

20 நாட்களில் தயாரிக்கத் திட்டமிட்டுள்ள தமது படத்துக்கு "நெஞ்சில் ஒரு ஆலயம்" என்று ஸ்ரீதர் பெயர் வைத்துள்ளார்.

தேவிகா, கல்யாண் குமார், முத்துராமன், ராமராவ், மனேரமா ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் கதை வசனத்தை ஸ்ரீதர் எழுதியுள்ளார். கண்ணதாசனின் பாடல்களுக்கு விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையமைக்கிருர்கள்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 5 திரைகளில்

வீரம் நிறைந்த வெற்றிக்காவியம்!

என். டி. ராமராவ் • பி. கண்ணும்பா

ராஜசுலோசன • பாலாஜி

எஸ். வி. சகஸ்ரநாமம் • ராஜகோபால்

ஆகியோர் நடித்த



வாஹினியின் ராஜமகுடம்

தயாரிப்பு & டைரக்ஷன் பி.என். ரெட்டி

இப்பொழுது திரையிடப்படுகிறது!

மனேஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

ஜெமினி கணேசன் - சரோஜாதேவி நடித்த

கல்யாண பரிசு


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவாசலத்து அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6ந்திகதிஅச்சிட்டு வெளியிடப்பெற்றது.